பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 06 | சனிக்கிழமை | 20.01.2024 | கதிர் 74







dsl
douglas & sons (pvt) ltd.
ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10
0703 009 555

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

# மக்களை ஒடுக்க முயற்சிக்கும் சட்டமூலங்களை எதிர்க்கிறோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் திட்டவட்டம்



ஊடக நிறுவனங்கள், சிவில் அமைப்புகள், ஜனநாயகத்திற்காக செயற்படும் குழுக்கள், தொழிற்சங்கங்கள் போன்ற தரப்பினர் எதிர்க்கட்சியின் பல பிரதான கட்சிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் தெளிவான முடிவை எட்டிள்ளனர்.

இதன் பிரகாரம், அரசாங்கம் முன்வைத்துள்ள நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை தானும் தனது குழுவினரும் முற்றாக நிராகரித்து இதற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசாங்கம் நிறைவேற்ற முயற்சிக்கும் நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய அமைப்புகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

குழந்தைகள், தாய்மார்கள், பொது மக்கள் மற்றும் நலிந்த பிரிவினரின் உரிமைகளைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரில், இதுபோன்ற ஜனநாயக விரோத சட்ட விதிமுறைகளைக் கொண்டு வந்து,அரசாங்கம் நாட்டில் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டி, பேச்சு சுதந்திரம், கலந்துரையாடல் சுதந்திரம், ஒன்று கூடி பேசும் சுதந்திரம், தகவல் அறிதலுக்கான சுதந்திரம் உள்ளிட்ட மனித உரிமைகள் போலவே,அடிப்படை உரிமைகளை மீறும் கடுமையான ஜனநாயக விரோத நடைமுறைக்கு பிரவேசித்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

ஜனாதிபதி தான் ஒரு ஜனநாயகவாதி என்பதை நாட்டுக்கும் உலகிற்கும் எடுத்துக்காட்டிய போதிலும், இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவர் கட்டமைத்த பிம்பம் பொய் என்பது நிரூபணமாகியுள்ளது. இந்தச் சட்டத்தின் மூலம்,அவரும் அவர் நியமிக்கும் ஆணைக்குழு உறுப்பினர்களும்,அவர் நியமிக்கும் பாதுகாப்புப் படையினரும் இந்நாட்டின் சாதாரண மக்கள் மீது தம் இஷ்டத்துக்கு ஏற்றால் போல் அழுத்தம் கொடுக்க முடியும். 'பேசினால் சிறை செல்ல வேண்டிவரும்' என்ற அச்சத்தை ஏற்படுத்தி மக்களை வாயடைக்கும் வேலைத்திட்டத்தை ஜனாதிபதி கையாண்டுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி உண்மையான ஒரு ஜன நாயகவாதியாக இருந்தால், இந்த மோசமான சட்டமூலத்தை வாபஸ் பெற்று, சகல பங்குதாரர்களுடனும் பயன்பெறும் உகந்த கலந்துரையாடலில் ஈடுபடுமாறும், இந்நாட்டிலிருந்து சமூக ஊடகங்களைக் காணாமலாக்கும் வேலைத்திட்டத்தில் ஈடுபடாது, தெளிவான ஜனநாயக வேலைத்திட்டத்தை அணுகுவது விரும்பத்தக்கது என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

ஜனநாயகத்தை மதிக்கும் மாற்று அரசாங்கமான ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் ஆணை மூலம் ஆட்சிக்கு வந்தவுடன், தன்னிச்சையாக நிறைவேற்றப்பட்ட சகல ஜனநாயக விரோத சட்டங்களையும் நீக்கி ஜனநாயகம் நிலைநாட்டும். அதுவரை இந்த விவகாரத்தில் தலையிடுமாறு தூதுவர்களிடம் வேண்டுகோள் விடுப்பதாகவும், இந்த ஜனநாயக விரோத சட்ட ஆணைகளைத் தோற்கடிக்க ஜனநாயக ரீதியாகவும் அமைதியான முறையிலும் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு மேலும் தெரிவித்தார். (05)

# கிளிநொச்சியில் தொடருந்து மோதி இரு பிள்ளைகளின் தந்தை இறப்பு

*கிளிநொச்சி அறிவியல்நகர் பகுதியில் ரயில் விபத்தில் சிக்கி இளம் குடும்பத்தர் பலியாகியுள்ளார்.*

*குறித்த விபத்து வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.*

*அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த யாழ்ராணி ரயிலுடன் மோதுண்டே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.*

*இந்த விபத்தில் முறிகண்டி பகுதியை சேர்ந்த 43 வயதுடைய கேதீஸ்வரன் விஜ யானந்தன் எனும் 2 பிள்ளைகளின் தந்தை யான ரிப்பர் சாரதியே உயிரிழந்துள்ளார்.*

*குறித்த விபத்தில் உயிரிழந்த நபரின் சடலம் ரயில்வே அதிகாரிகளால் கிளி நொச்சி ரயில் நிலையத்தில் ஒப் படைக்கப்பட்டது.*

*பின்னர் சடலம் புகையிரத நிலைய அதிகாரிகளால் கிளிநொச்சி வைத்தியசாலையிடம் ஒப்படைக்கப்பட்டது.*

*பொலிஸ் விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்படவுள்ளதாக ரயில்வே நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.( 05)*







காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 06 சனிக்கிழமை 20.01.2024 கதிர் 74

# சொத்து வரியை அறவிடுக நாணய நிதியம் வலியுறுத்து

## வரிச் சலுகை தொடராமல் இருப்பது முக்கியம் எனவும் தெரிவிப்பு

இலங்கை அரசு சொத்து வரியைஅறிமுகப்படுத்த வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. அது தொடர்பான விரைவான முன்னேற்றம் முக்கியமானது என்று கூறியுள்ள அது, வரிச் சலுகைகள் நடைமுறையை தொடராமல் இருப்பது முக்கிய மானதாகும். இந்த முடிவை தொடர்வதாகஎமக்குஉறுதியளிக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு தலைமை அதிகாரி பீட்டர் பூருவர் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியில் நேற்றையதினம்ஊடகங்களைச் சந்தித்தபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தல் நாளை நடக்கிறது. அதற்கு முன்னதாக இன்று அக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடப்பதாக இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் அதனை நடத்துவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த மத்திய செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்று தலைவர் மாவை சோ.சேனாதிராசாதான் பிடிவாதமாக இருந்தார்.

கொழும்பில் பெருந் தலைவர் சம்பந்தனின் வீட்டில் நடந்த அரசியல்குழுக் கூட்டத்தில் தலைவர் தெரிவுக்கான முட்-டுக்கட்டையைப் போட எடுக்கப்பட்ட முயற்சியை நாடாளுமன்றஉறுப்பினர்சுமந்திரன் சாதுரியமாகத் தவிர்த்துவிட்டிருந்தார். தலைவர் தேர்தல் போட்டியைத் ☞ 2

## 15 காசாளர்கள் பணி நீக்கம் மின்சார சபையால் அறிவிப்பு

இலங்கை மின்சார சபையின் 15 காசாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

சுகவீனவிடுமுறையைபதிவுசெய்து, அண்மையில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையில் பங்குபற்றியகுற்றச்சாட்டுதொடர்பாகமுன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையின்போது, ☞ 8

# சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் எம் ஆட்சியில் மீளாய்வுக்குட்படும்

## தூதுக்குழுவிடம் சஜித் நேரில் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் சர்வதேச நாணயநிதியத்துடனான இருதரப்புஉடன்படிக்கை மீளாய்வுக்கு உட்படுத்தப்படும்என்றுஎதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச அதன் தூதுக்குழுவிடம்நேரடியாகதெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்துக்குநேற்று விஜயம் செய்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுதரைமை அதிகாரி பீட்டர் புரூவர் தலைமையிலான குழுவினருடான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு ☞ 8

# ஆளும் தரப்புக்கு 7 நாள் அவகாசம் தீர்வின்றேல் பணிப் புறக்கணிப்பு

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

தமது சம்பளப் பிரச்சினைக்கான தீர்வுக்காக ஆளும் தரப்புக்கு 7 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் தீர்வுவழங்கப்படாவிடின் முதலாம் திகதி முதல் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுமெனவும் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட 35,000 ரூபா கொடுப்பனவை வழங்குமாறு கோரி 72 சுகாதார தொழிற்சங்கங்களால்தொடர்ச்சியாக கவனயீர்ப்பு மற்றும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலையுடன் போராட்டங்கள் முடிவுக்கு வந்ததோடு சுகாதார தொழிற்சங்கக்கூட்டமைப்பினர் பிரதிநிதிகளுக்கிடையில் நேற்று இடம் பெற்றது. ☞ 8

# மக்கள் தெரிவு செய்த ஜனாதிபதி ஆகும் ரணிலின் கடைசி கனவும் நிறைவேறாது

## திருகோணமலையில் கஜேந்திரகுமார் ஆரூடம்

ரணில் விக்கிரமசிங்கவின் கடைசிக் கனவு, தான் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாகவேண்டும் என்பதுதான். அந்த கனவு சாத்தியமற்றது. ஏன்என்றால்இந்தமுறை ஜனாதிபதி தேர்தலில் வாக்குகள் மூன்றாகப் பிரியப்போகின்றன. அதனால் ரணிலுக்கு வாக்குகள் குறையும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானகஜேந்திரகுமார்பொன்னம்பலம் தெரிவித்தார். ☞ 8

## பணி நீக்கத்தை எதிர்த்து

# தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்க மின்சார சபை ஊழியர்கள் தீர்மானம்

மின்சாரசபை ஊழியர்கள்சிலர்பணிநீக்கம் செய்யப்பட்டமையைக் கண்டித்து கடும்தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கைமின்சாரசபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:

நாட்டின் வருமானம் ஈட்டும் துறையை திட்டமிட்ட முறையில் பகுதிகளாக வகுத்து தனியாருக்குவிற்பனை ☞ 8

# டெங்கினால் வடக்கில் மேலும் இருவர் இறப்பு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேலும் இருவர் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர்.

கொக்குவில் பகுதியில் மயங்கி விழுந்த நிலையில் வைத்தியசாலையில்சேர்க்கப்பட்ட, அரியாலை பகுதியை சேர்ந்த செல்வராசா சிந்துஜன் (வயது 31) எனும்இளைஞன்அங்கு உயிரிழந்தார்.

பரிசோதனைகளில அவருக்குடெங்குதொற்று இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

அதேவேளை, முல்லைத்தீவு மல்லாவி பகுதியைசேர்ந்தஒருவர் டெங்குநோய்தீவிரமான நிலையில்யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

# மரக்கறிகளின் விலைகள் பெப்ரவரியிலே இறங்கும்

## அமைச்சர் தெரிவிப்பு



பெப்ரவரி மாதத்தில் மரக்கறிகளின்விலைகள் வீழ்ச்சி அடையும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில்செய்தியாளர்களிடம் பேசும்போது அவர்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

தொடர்ச்சியாகமழை பொய்கின்றபோது, வெள்ள நிலைமைகள் ஏற்படுகின்றபோது விளைச்சல்பொருட்களின் நிலைமைகள்மோசமடைகின்றன. இதனால்தான் விலைகள் அதிகரிக்கின்றன.

தற்போது விலைகள் அதிகரித்தாலும் அந்தப் பணம் விவசாயிகளைச் சென்றவடைவதில்லை என்றுகருதப்படுகின்றது. இடைத்தரகர்கள்தான் இந்த அதிகரிப்புக்கு காரணம் என்றும் ☞ 8

# ஜனாதிபதி முறையை ஒழிக்க ராஜித சேனாரத்ன முழு ஆதரவு

நிறைவேற்றுஅதிகார ஜனாதிபதிமுறைமையை நீக்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பாராக இருந்தால்நான் இரண்டுகைகளையும் உயர்த்தி அவருக்கு ஆதரவளிப்பேன்என்றுநாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற சிவில் அமைப்பினரு ☞ 8

# அனைத்து அபிவிருத்தி பணிகளையும் இந்த ஆண்டில் தொடங்க அரசு தயார்

தடைப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்திப் பணிகளையும்ஆரம்பிக்க நாம்தயாராகஉள்ளோம் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். ☞ 8

# மரக்கறி விலை எகிற வற் வரியும் காரணம்

## கமநல சம்மேளன ஏற்பாட்டாளர் தெரிவிப்பு

மரக்கறிகளின்விலை அதிகரிப்புக்கு வற் வரி அதிகரிப்பும்ஒருகாரணம் என்று அகில இலங்கை கமநல சம்மேளனத்தின் தேசிய ஏற்பாட்டாளர் நாமல்கருணாரட்னதெரிவித்தார். ☞ 2

# சபாநாயகரைச் சந்தித்தார் சீன தூதுவர் சென்ஹொங்

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் சபாநாயகர் மஹிந்தயாப்பாஅபேவர்தனவை நேற்றுநாடாளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸின்நிலைக்குழுவின் தலைவர்ஸாவோ லெஜியின் ☞ 2

## இனி இது .....

தவிர்த்து இணக்கப்பாட்டின் அடிப்படையில் யாராவது ஒருவர் விட்டுக்கொடுத்து தலைவராகலாம் என்று அரசியல்குழுக் கூட்டத்தில் யோசனைமுன்வைக்கப்பட்டபோது, அது -குறித்து மறுநாள் வேட்பாளர்களான தாம் கூடிப்பேசி அது குறித்த முடிவை அறிவிப்பதாகவும், அதில் இணக்கம் வராவிட்டால்ஜனவரி21தேர்தல்தான் என்றும் அரசியல் குழுவை வழிப்படுத்தி அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படுவதை சுமந்திரன் தவிர்த்துவிட்டார்.

அப்போது போட்டி உறுதியானதுதான் என்பது தெரிந்துவிட்டது. என்றாலும் மறுநாள் சம்பிரதாயபூர்வமாக மாதிவெலவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வீட்டுத் தொகுதியில் சிறீதரனின் வீட்டில் கூடிய வேட்பாளர்கள் மூவரும் சுமார் 20 நிமிடங்களில் தலைவர் தேர்தலை உறுதிப்படுத்தினர். அந்த அரசியல் குழுக் கூட்டத்தில் விட்டதைப் பிடிக்க முடியுமாஎன்கிறநோக்கத்தோடுதான் இன்றைய மத்திய செயற்குழுக் கூட்டத்திற்குதலைவர் கடும் முயற்சி செய்தார் என்று கருதப்படுகின்றது. ஆனால் அதனையும் கடைசி நேரம் வரைக்குமாக இழுத்தடித்துச் சமாளித்த நிலையில் கடைசியில் அதனையும் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

கட்சியின் செயலாளர் கடுமையானசுகவீனமுற்றிருக்கிறார். அவருக்கு சுவாசப் பையில் தொற்று ஏற்பட்டிருப்பதால் பேசக் கூடாது என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியிருக்கின்றனர் என்று சொல்லப்படுகின்றது. இத்தகைய நிலையில் அடுத்தடுத்து இரு நாட்களுக்கு கூட்டங்களில் பங்கேற்பது சாத்தியமில்லை என்று கருதிய செயலாளர், இரண்டில் மிக முக்கியமானதான கட்சியின் பொதுக் குழுக் கூ-ட்டத்தில் கலந்துகொள்வது என்று முடிவெடுத்திருக்கிறார். தன்னால் இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது என்பதால் இந்த மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டவில்லைஎன்றுஅவர்தலைவர் மாவையருக்குஅறிவித்திருக்கின்றார் என்றுதெரிகின்றது. வேறுவழியின்றி தலைவரும்அதனைஏற்றுக்கொள்ள வேண்டியவராகி இருக்கின்றார்.

இதற்கிடையில்தலைமைக்கான வேட்பாளர்களில் ஒருவரான கிழக்கைச்சேர்ந்தவரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் பேசும்போது, கட்சியின் தலைவராக சுமந்திரன் வருவாரானால் தமிழ்த் தேசியம் பாதிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். கிழக்கு மக்கள் தமிழ்த் தேசியத்தோடு நிற்கிறார்கள் வடக்கு மக்களும் அவ்வாறே நிற்கவேண்டும் என்றும் கேட்டிருக்கிறார். அதாவது தமிழ்த் தேசியத்தைக் காப்பதற்காக சுமந்திரனுக்கு எதிராக வாக்களியுங்கள் என்பதே அவர் தனது கட்சியினருக்கு இதன் மூலம் விடுத்த கோரிக்கை. அவர் ஏற்கனவே இந்தத் தேர்தலில் தனது ஆதரவு சிறீதரனுக்குத்தான் என்று வெளிப்படையாகவே அறிவித்துவிட்டார். ஒரு ஒப்புக்குச் சப்பாணியாக, கிழக்கிலிருந்தும் தலைமைப் பதவிக்குப் போட்டியிடவேண்டும் என்பதற்காகத்தான் தான் போட்டியிட்டார் என்றும் வெளிப்படையாகவே கூறுகின்றார்.

கட்சிக்குள் நடக்கும் பரப்புரைகளிலும் சுமந்திரனை ஏன் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கக்கூடாது என்பதைப் பற்றியே அதிகம் பேசப்படுகின்றது. ஆக மொத்தத்தில் தலைமைக்கான உண்மையான போட்டியாக அல்லாமல் சுமந்திரனை தலைவராகாமல் தடுப்பதற்கான வியூகங்களிலேயே மற்றவர்கள் அதிகம்கவனம்செலுத்துகின்றார்கள் என்றுபடுகின்றது. அப்படிப்பார்த்தால் சுமந்திரனின்வெற்றியைமற்றவர்கள் உறுதிசெய்கிறார்கள், அதை நிறுத்த, தட்டிப் பறிக்கத் தம்மாலான முயற்சிகளைமேற்கொள்கின்றார்கள் என்பதாகத்தான் தோன்றுகின்றது.

இதற்கிடையில் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைத் தேர்தல் தமிழ் மக்களின் எதிர்காலத்தை நிர்மூலமாக்கிவிடும் என்கிற வகையிலான பயமுறுத்தல்களும் பரப்பப்படுகின்றன. அதனால் இந்தத் தேர்தல் நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது. தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தைத்தான் விரும்புகின்றார்கள், அதுதான் அவர்களின் வேணவா என்றால், தமிழ் அரசுக் கட்சி அந்தத் தடத்தை விட்டுவிலகுமானால்அந்தக்கட்சியை நிராகரித்து தமிழ்த் தேசியத்தைச் சார்ந்து நிற்கும் ஒரு கட்சியை அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள். அல்லது தமிழ் மக்களுக்குத் தேவையானபுதியதலைமைஒன்று மேற்கிளம்பும். அவ்வளவுதான்.

அப்படியிருக்கையில் தமிழ் அரசுக்கட்சியின்தலைமைப்போட்டி தொடர்பில் அளவுக்கதிகமான எதிர்பார்ப்புக்களையும் விவாதங்களையும்கிளப்புவதுதேவையற்றது என்பதே எனது கருத்து. அது ஒரு உட்கட்சி விவகாரம். அரசியல் களத்தில் தமிழ் அரசுக் கட்சியைவிடவும் தீவிர தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் உண்டு. இதுவரை தமிழ் அரசுக் கட்சி முன்னெடுத்துவந்த மிதவாத தமிழத் தேசியத்தை அப்படியே பிரதிபலிக்கக்கூடிய கட்சிகளும் களத்தில் உண்டு. தமிழ் அரசுக் கட்சி தமிழ்த் தேசியத் தடத்திலிருந்து பிறழ்ந்து, அதுதமிழ் மக்களுக்கு ஏற்புடையதில்லை என்றால் அதனைத் தமிழ் மக்கள் நிராகரிப்பார்கள். கட்சிகள் மக்களுக்கானவையே அன்றி கட்சிகளுக்காக மக்கள் இல்லையே! அப்படிப்பட்ட நிலையில் ஒரு கட்சியின் தலைமைப் போட்டியை தமிழர்களின் எதிர்காலம் என்ற வகையில் நிலைநிறுத்த முயல்வது சரியானதாகப்படவில்லை.

கட்சியின் தலைவர் தெரிவு திருகோணமலை நகரசபை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 1-0 மணிக்குத் தொடங்கும். 343 உறுப்பினர்கள் தலைவரைத் தெரிந்தெடுக்க வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள். அவர்களில் பெரும்பான்மையானவர்களின் ஆதரவைப் பெறுபவர் அடுத்த தலைவராகத் தெரிவாகுவார்.

அப்படித் தலைவர் தெரிவுக்குப் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களுக்கும், போட்டிக்கு இன்னும் ஒரு நாளே எஞ்சியிருக்கும் நிலையில் சமூகச் செயற்பாட்டாளரானம.செல்வின்ஒருபகிரங்கக் கடிதத்தை எழுதியுள்ளார். அதில்,

அ) தற்போதுதமிழரசுக்கட்சியும் தமிழ்மக்களும் அனுபவிக்கும் கட்சியின் தலைமைத்துவ தேக்கநிலைஉடனடியாகஉடைக்கப்படவேண்டும். அதனைத் தொடரவோ அல்லது அதன் நிகழ்ச்சி நிரலின் தொடர்ச்சியாக செயற்படவோ அனுமதிக்ககூடாது.

ஆ). தவிர்க்க முடியாமல் தமிழரசுக்கட்சியின் யாப்பின்படி புதிய தலைவர் தெரிவுக்கான போட்டி ஏற்பட்டுள்ள நிலையில் அதனை இடைநிறுத்துவதோ அல்லது மீள்பரிசீலனைக்கு உட்படுத்துவது என்ற பெயரில் தற்போதைய தலைமை தொடர வாய்ப்பளிப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இ). அதேவேளையில் தலைமைப்பதவிக்கான போட்டியில் வெல்வதற்காக கட்சியின் பெறுமதியான அங்கத்தவர்கள் தங்களுக்குள் சேறுவாருவதும் ஆதரவாளர்கள் குழுநிலையாக பிரிவதும் சகிக்கப்படமுடியாத விடயங்கள்.

ஈ). உங்கள்தேர்தல்போட்டியின் முடிவுகளின் பின் ஒருவரின் கையோக்குவதாகவோமற்றவர்கள் புறக்கணிக்கப்படுவதாகவோ ஒதுக்கப்படுவதாகவோ நிலைமைகள் காணப்படாது என்று போட்டியாளர்களாகிய நீங்கள் வாக்குறுதியளித்தாலும் ஊமைக்காயங்கள் ஆழமானதாகவும் பின் விளைவுகள் கட்சியின் வாக்கு வங்கியிலும் தமிழரசுக் கட்சியின் எதிர்கால பங்களிப்பிலும் கடுமையான தாக்கத்தைச் செலுத்துவதுடன்ஈழத்தமிழர்களின் அரசியல்தலைமையில்ஏற்பட்டுள்ள தலைமைத்துவ இடைவெளி பெரியதாக மாற்றமடையும் என்பதனையும் நீங்கள் மறுக்கமாட்டீர்கள்.

இத்தகைய நிலைமையில் உங்களுக்குள்ள தெரிவுகளில் ஒன்று யாதெனில் நீங்கள் மூவரும் ஒரு கனவான் உடன்பாட்டிற்கு வருவதுதான்மிகப்பொருத்தமானது. அந்த உடன்பாட்டின்படி பின்வரும் விடயங்களை செய்யலாம்.

1. தற்போதைய நிலையில் தமிழரசுக்கட்சியை மீள் கட்டமைப்புக்குள் கொண்டுவரவேண்டியுள்ளது. கடசியின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையினை திட்டமிட்டு அதிகரித்து பலம்பெறச் செய்யவும் கிளைகளைப் புனரமைத்ததில் கடந்த காலத்தில் ஏற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் அவசியமும் கால அவகாசமும் தேவையாக உள்ளது. தற்போதுள்ள தலைமைத்துவத்தின் கீழ் அது சாத்தியமில்லை என்பது வெளிப்படை. ஆகவேஒருகுறிப்பிட்ட காலத்திற்கு (ஒரு வருடம்) தற்காலிக தலைவர் ஒருவரின் கீழ் கட்சியை முழுமையாககட்டமைக்கவேண்டும்.

2. தேர்தலில் கூர்மையடைந்துள்ள போட்டி இருமுனைப் போட்டியாக வெளிப்பட்டுள்ள நிலையில் நீங்கள் இருவரும் உங்கள் போட்டிநிலையிலிருந்துபின்னிறங்கி கிழக்கு மாகாண போட்டியாளரை தலைவராக வாக்களிக்கும்படி உங்கள் ஆதரவாளர்களை கோருவதன் ஊடாக தற்காலிக தலைவராக யோகேசுவரன் தெரிவுசெய்யப்படுவதனை உறுதிசெய்து கட்சியின் ஏனைய போறுப்பான பதவிகளான செயலாளர், சர்வதேச தொடர்பாளர்ஆகியபொறுப்புக்களை நீங்கள்இருவரும்பொறுப்பேற்பதன் மூலம் கட்சியை இணைந்து பலப்படுத்தலாம்.

3. நீங்கள் இருவரும் கூர்வாட்களாக தொடர்ந்து இருந்தால் கட்சி என்னும் ஒரு உறையுள் இரண்டு வாட்களையும்வைத்திருக்கமுடியாது. ஆனால் இரண்டு கம்பீரமான குதிரைகளாக நீங்கள் கட்சியையும் தமிழர்தேசத்தின்செல்நெறியையும் முன்நோக்கி விரைந்து இழுத்துச் செல்லலாம்.

4. ஆயுதங்கள்மௌனிக்கப்பட்டு 14வருடங்கள் கடந்த நிலையில் ஏற்பட்டுள்ள ஏமாற்றங்களும் தடுமாற்றங்களும்நிறைந்தஇச்சூழ்நிலையில் உங்கள் இருவரினதும் ஆளுமையினையும்ஆற்றல்களையும் செயலாற்றல் திறன்களையும் குறைத்து மதிப்பிடுவதோ அல்லது தமிழினம் இழந்து போவதோ மிகவும் பாரதூரமானது. அவ் இடைவெளியை நிரப்புவதும் குறுங்காலத்தில் சாத்தியமற்றது.

5. குறித்த ஒரு வருடத்தினுள் தமிழ் அரசுக்கட்சி தன்னை முழுமையாக சீரமைத்து வலுப்படுத்திய பின்பு உங்களுக்குரிய பொறுப்புக்களை பரஸ்பரம் தீர்மானித்து தலைமைத்துவத்தினை கூட்டுப் பொறுப்புக்களுடன் தொடரமுடியும்.

இந்த வேண்டுகோளும் ஆலோசனையும்காலத்தின்தேவை கருதியும் ஈழத்தமிழ்ச்சமூகத்தின் எதிர்காலம் கருதியும் தங்களிடம் முன்வைக்கப்படுகின்றது என்பதனை அன்புடனும் நட்புடனும் உரிமையுடனும் தெரிவித்துக்கொள்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தவேண்டுகோள்ஏற்கப்படும் அரசியல் சூழல் தமிழ் அரசுக் கட்சிக்குள் இல்லை என்பதே யதார்த்தம். போட்டி உறுதி. அதில் வெற்றிபெற்றுவரக்கூடியதலைமை உறுதியானதாக இருக்கக்கூடும். அந்தத் தலைமையைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா இல்லையா என்பது அடுத்த ஆண்டு நடக்கம் பொதுத் தேர்தலிலேயே தெரிந்துவிடும்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## சொத்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில்,

இலங்கை அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தினால் சாதகமான முன்னேற்றத்தினைக் காண முடிகின்றது. கடந்த ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 1.6 சதவீதமாக காணப்பட்டது. கடந்த ஆறாம் திகதி வரையிலான அவதானிப்பில் அது முன்னேற்றம் கண்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டப்பாடு தற்போது குறைவடைந்துள்ளது. வறுமையும்கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரப் பட்டுள்ளது. கடந்த வருடத்தின் இறுதிக் காலாண்டிலும் வருமானம் அதிகரித்துள்ளது.

வருவாய் அடிப்படையிலான ஒருங்கிணைப்பை நிலைநிறுத்தும் போது நியாயமான சுமை பகிர்வை உறுதிசெய்வதற்கு, சொத்து வரியை அறிமுகப்படுத்துவதற்கான விரைவான முன்னேற்றம் முக்கியமானது. வரிச் சலுகைகள் நடைமுறையை தொடராமல் இருப்பது முக்கியமானதாகும். இந்த முடிவை தொடர்வதாக எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்து முன்னேற்றங்களையும் இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதற்காக பயன்படுத்த வேண்டும். நிதித்துறையின் ஸ்திரத் தன்மையைப் பாதுகாக்க வும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் திறனை அதிகரிக்கவும் இலங்கை அதிகாரிகள், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு திட்டத்தின் கீழான உறுதிப்பாட்டிற்கு ஏற்ப வங்கி சட்டத்தில் அவசரமாக திருத்தங்களை நிறைவு செய்ய வேண்டும்.

சர்வதேசநாணயநிதியத்தினைப் பொறுத்தவரையில், நாம் அனைத்து தரப்பினரையும் சந்தித்து கருத்துக்களைக் கேட்பதற்கு தயாராகவே உள்ளோம். அரசியல் கட்சிகளுடன் சந்திப்புக்களைச் செய்தமைக்கான நோக்கம் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான அவர்களின் நிலைப்பாட்டைப் பெற்றுக்கொள்வதாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் மேற்கொண்டபோது, அங்குள்ள மக்களின் வாழ்க்கை தரம், காலநிலை மாற்றங்கள் மற்றும் சிறு தொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்டவை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

தேர்தலின் பின்னர் இடம்பெறுகின்ற விடயங்கள் முக்கியமானவை. அதேபோன்று தேர்தலுக்கு முன்னர் இடம்பெறுகின்ற விடயங்களும் முக்கியமானவை. இலங்கை மீளக் கட்டியெழுப்பு வதற்காக முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்புத் திட்டம் முக்கியமானதாகும்.

அந்தத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதில் சிறந்த முன்னேற்றம் தெரிகின்றது. அதனடிப்படையில் இலங்கையினால் இந்த நெருக்கடியிலிருந்து மீண்டெழுந்து வர முடியும். எனினும் அதற்கு குறிப்பிட்டதொரு காலம் தேவை.

கடன்மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை அதிகாரிகள் முன்னேற்றப்பாதையில் பயணிக்கின்றார்கள். அதில் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். உத்தியோகபூர்வமான கடன்வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வருவதும் முக்கியமானது.

உத்தியோகபூர்வமான கடன் வழங்குநர்களுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள கடன் இணக்கப்பாட்டை நாம் சிறந்த முன்னேற்றமாக காண்கின்றோம். அந்த இணக்கப்பாட்டை இறுதி இணக்கப்பாடாக மாற்றுவதையே தற்போது நாம் மேற்கொள்ள வேண்டும். அதன்போது கடன்மறுசீரமைப்பின் ஒருபகுதி நிறைவுபெறும்.

மறுபக்கம் வணிகக் கடன் வழங்குநர்களுடன் கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுக்கு வரவேண்டியுள்ளது. நாம் அறிந்த வகையில் அதற்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த செயற்பாட்டை சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது மீளாய்வுக்கு முன்னதாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கையின் கடன்மறுசீரமைப்புஎன்பதுசுமார்பத்துவிடயங்களை உள்ளடக்கிய விடயமாகும். தற்போது பிரதான இரண்டு கட்டங்களைக் கடந்துள்ளோம். மூன்றாம்கட்டத்தினையும்கடக்கவேண்டியுள்ளது.

இலங்கை, சீன எக்ஸிம் வங்கியுடன் மேற்கொண்ட இணக்கப்பாட்டை இறுதி இணக்கப்பாடாக மாற்ற வேண்டும். அத்தோடு சீன அபிவிருத்திவங்கியும்வணிககடன் வழங்குநர் என்பதால் அப்பேச்சவார்த்தையையும் முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

அத்துடன் 48 மாதகால விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழான இரண்டாவது மீளாய்வு எதிர்வரும் வசந்த காலத்தில் இடம்பெறும் எனினும் அதற்கான திகதி இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை

## மரக்கறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருநாகலில் நேற்று ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மரக்கறிகளின் விலைகள் வெகுவாக அதிகரிப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. வற் வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வற் வரி அதிகரிக்கப்படும்என்றஅறிவிப்புவிடுக்கப்பட்டதை அடுத்து அனைத்துப் பொருட்களினது விலைகளும் அதிகரிக் கப்பட்டுள்ளன. அந்த வகையில்வற்வரிஅதிகரிப்புமரக்கறிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மற்றொரு விடயம் எல்னி நோவின் தாக்கம். ஒக்டோபர் மாதத்திற்குபின்னர்மழைபெய்யாது என்றுஎதிர்வுகூறப்பட்டது. எனினும் கடுமையான மழைபெய்தது. இதனால் விளைச்சல் குன்றியது. விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். விவசாயிகள் தமது பயிர்ச்செய்களை முழுமையாகப்பராமரிக்க முடியாது போனது. இதனால் விளைச்சல் கணிசமாகக் குறைவடைந்தது.

இதேவேளை, பழங்கள் மற்றும்மரக்கறிகளைபாதுகாப்பதற்கான முறையாக குளிரூட்டிக்கட்டமைப்பொன்றுஎமதுநாட்டில் இல்லை. இந்தப்பரப்பில்நாம்மிகவும் பலவீனமாக இருக்கின்றோம். இதனால் விளைபொருட்களை சந்தைப்படுத்துகின்றபோதுகழிவுகள் அதிகமாக உள்ளன.

நமதுநாட்டின்காய்கறிகள்மற்றும் பழங்களில் 38 சதவீதமானவை அழிக்கப்படுகின்றன. அவற்றைப் பாதுகாத்துஒழுங்குபடுத்தவதற்கான முறைமையொன்று காணப்படவில்லை. இத்தகைய விடயங்களுக்குபதிலளிப்பதற்குக்கூட ஆட்சியாளர்களால் முடியாத நிலைமைகளே உள்ளன.

ஆட்சியாளர்களிடம் விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான இயலுமைகள் இல்லை. அவ்வாறு தீர்வுகளை வழங்குவதற்கான இயலுமைகள் இல்லையென்றால் தயவு செய்து பதவியிலிருந்து விலகிச் செல்லுங்கள் என்றார்.

## சபாநாயகரைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுவருட வாழ்த்துச் செய்தியை இதன்போது சீனத் தூதுவர் சபாநாயகர்மஹிந்தயாப்பாஅபேவர்தனவிடம் வழங்கினார்.

மேலும், இரு தரப்பினருக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், 'ஒரே சீனா' கொள்கை தொடர்பில் இலங்கை வழங்கிவரும் ஆதரவுக்கு சீனத் தூதுவர் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

அரசு என்ற வகையில் இலங்கை எப்பொழுதும் 'ஒரே சீனா' கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதன்போது சீனத் தூதுவரிடம் கூறினார்.

அதற்கு மேலதிகமாக, கொழும்பு துறைமுக நகரத் திட்டம் உள்ளிட்ட இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீன முதலீட்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் இரு தரப்பினருக்குமிடையில் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவும் கலந்துகொண்டார்.

முன்னதாக, நேற்றுமுன்தினம் இலங்கைக்கு புதிதாக நியமனம் பெற்றுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ்ஜா உத்தியோகபூர்வமான சந்திப்பைசபாநாயகர்மஹிந்தயாப்பா அபேவர்த்தனவுடன் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## அணி சேரா இயக்கத்தின் முக்கியத்துவம்

அணி சேரா இயக்கத்தின் தலைவர்களது 19ஆவது மாநாடு உகண்டாவின் தலைநகர் கம்பாலாவில் நேற்றுத் தொடங்கியது. “உலக சுபீட்சத்துக்காக ஒன்றிணைந்த ஒத்துழைப்புக்களை மேலும் பலப்படுத்திக்கொள்ளல்” என்ற தொனிப்பொருளின் கீழ் தொடங்கிய இந்த மாநாடு இன்றும் இரண்டாவது நாளாக இடம்பெறுகின்றது.

உகண்டாகுடியரசுஜனாதிபதியொவேரிமுசேவேனியின் தலைமையில் 120 நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். இந்த மாநாட்டில் முக்கிய விடயமாக பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் அவர்களின் சுயாதீனமானதும் சுதந்திரமானதுமான உரிமைகளை பறிக்க முடியாது என்ற விடயத்திற்கு முன்னுரிமை வழங்கியுள்ளது.

அணி சேரா இயக்கம் (Non-Aligned Movement, NAM) எந்தவொரு அதிகார மையத்தின் சார்பாகவோ எதிராகவோ அணிசேராத நாடுகளின் குழுமமாகும். இதில் 120 நாடுகள் உறுப்பினர்களாகவும் 17 நாடுகள் பார்வையாளர்களாகவும் உள்ளன.

இந்த இயக்கம் 1961ஆம் ஆண்டு பெல்கிரேட்டில் உருவானது. யுகோசுலாவியாவின் அதிபராக இருந்த சோசப்பு பிரோசு டிட்டோ, இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு, எகிப்தின் இரண்டாவது தலைவர் ஜமால் அப்துல் நாசிர், கானாவின் முதல் தலைவர் குவாமே நிக்ரூமா மற்றும் இந்தோனேசியாவின் முதல் தலைவர் சுகர்ணோ இவர்களின் கருத்தாக்கத்தில் இந்த இயக்கம் தொடங்கியது. இலங்கை இந்த அமைப்பின் தொடக்க கால உறுப்பினர்களில் ஒன்று.

அமெரிக்கா தலைமையில் நேட்டோவாகவும் ரஷ்யா தலைமையில் வார்சோவாகவும் உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் பிளவுபட்டு நின்ற பனிப்போர் காலத்தில் மேற்கத்திய மற்றும் கிழக்கத்திய அதிகாரமையங்களுக்கு இடையே எந்தப் பக்கமும் அணி சேராமல் நடுநிலையில் வளரும் நாடுகள் செல்லவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. பெரும்பாலும் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளைக் கொண்ட இந்த அமைப்பு உலகில் உள்ள மிகப் பெரிய அமைப்புக்களில் ஒன்று. இருந்தபோதும் பண பலம் மற்றும் ஆயுதப் பலமற்ற ஒரு அமைப்பு.

மாறி வரும் உலக ஒழுங்கின் கீழ், சீனா போன்ற நாடுகளின் வளர்ச்சி அணி சேரா நாடுகளின் கூட்டிலும் கனமான தாக்கத்தைச் செலுத்தக்கூடும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வளர்ந்து வரும் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்க்கும் அமெரிக்காவுடன் இந்தியா அணி சேர்ந்துவரும் நிலையில் ஆசிய நாடுகளின் அணி சேராக் கொள்கை தொடர்ந்தும் வலுவான நிலையில் தொடருமான என்கிற சந்தேகம் தவிர்க்க முடியாதது ஆகின்றது. இலங்கை, இந்தியா இரண்டும் தமது அணி சேராக் கொள்கையில் இப்போதுவரை உறுதியாக இருக்கின்றபோதும் சீனாவின் வளர்ச்சி ஆதிக்கம் என்பன எதிர்காலத்தில் இந்தக் கொள்கை நிலைப்பாட்டில் ஏற்படுத்தப்போகும் மாற்றம் மிக முக்கியமானதாக இருக்கும்.

இன்று இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் கவனத்திற்குரிய நாடுகளில் ஒன்றாக வடகொரியா இருக்கின்றது. 1976 முதல் அது இந்த அமைப்பில் உறுப்பினராக இருக்கின்றது. கொரிய தீபகற்பத்தின் அமைதியின்மைக்குக் காரணமாக இருக்கும் வடகொரியா தீவிர அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது. வெளிப்படையாகவே ரஷ்யா மற்றும் சீனாவுடன் அது அணி சேர்ந்துகொள்கின்றது. இருந்தாலும் அணி சேராக் கொள்கையுடன் பயணிப்பதாகவே அதுவும் கூறுகின்றது.


இந்தநிலையில் உலகின் மிகப்பெரிய அமைப்புக்களில் ஒன்றான அணி சேரா இயக்கத்தின் உறுப்பு நாடுகள் தமக்கிடையிலானஅரசியல், வர்த்தகஒத்துழைப்புக்களை அதிகரித்து முன்னேற்றுவதன் மூலம் இந்த உலகத்தை மேலும் சிறப்பானதாக்குவதற்குக் காத்திரமான பங்களிக்க முடியும். அதிலும் போர்கள் அற்ற உலகத்தை உருவாக்க அந்த அமைப்பு காத்திரமான வகிபாகத்தை கொண்டிருக்க முடியும். அது நோக்கிய அதன் முன்முயற்சிகள் தீவிரப்படுத்தப்படவேண்டும்.

# இதய சிகிச்சையில் புதிய ஒளி

கு.கணேசன்

தீவன் சிங் டார்டி ஹரியாணா மாநிலத்தவர். பேருடல் (Morbid obesity) கொண்டவர். வயது 87. ஏற்கெனவே இருமுறை மாரடைப்பு ஏற்பட்டு பைபாஸ் அறுவைச் சிகிச்சையில் உயிர் பிழைத்திருக்கிறார். பித்தப்பையிலும் புராஸ்டேட் சுரப்பியிலும் பிரச்சினை வந்து அறுவைசிகிச்சை செய்யப்பெற்றிருக்கிறார். ஒருமுறை குடலிறக்கம் ஏற்பட, அதற்கும் அறுவைசிகிச்சைதான் தீர்வு கொடுத்துள்ளது.

டார்டிக்கு இப்போதைய பிரச்சினை சுவாசிப்பதில் சிக்கல். படுத்தால் மூச்சு முட்டுகிறது. இருமல் தொடர்ந்து தொல்லை தருகிறது. கண்ணுக்குக் கீழே, முகம், பாதம் ஆகியவற்றில் நீர் கோத்து வீங்கியுள்ளன. உள்ளூரில் இரண்டு மருத்துவர்களிடம் ஆலோசனை பெற்றார். குருகிராமில் உள்ள ‘மெதாந்தா இதயநல நிறுவன’த்துக்குப் (Medanta Heart Institute) பரிந்துரைக்கப்பட்டார்.





### ஆசியாவிலேயே புதிது

டார்டிக்கு எக்ஸ்-ரே, எக்கோகார்டியோகிராம் (Echocardiogram) உள்ளிட்ட இதயநலம் தொடர்பான எல்லாப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. அவருக்குக் கடுமையான ‘இதயச் செயலிழப்பு’ (ளீலிஜஆளவிமிஷ்ஸள கூளிழிஷமிய்ழிஷ்யிற்ஷள) ஏற்பட்டிருக்கிறது என்று அவை முடிவுகட்டுகின்றன; இதயத்தில் இரண்டு வால்வுகள் படுமோசமாகப் பழுதாகியுள்ளதுதான் காரணம் என்கின்றன. ‘உடனடியாக அறுவைசிகிச்சை செய்து பழுதான வால்வுகளைச் சீராக்க வேண்டும்’ என்கிறார் மருத்துவமனைத் தலைவர் மருத்துவர் பிரவின் சந்திரா. ஆனால், அறுவைசிகிச்சைக்கான உடல் தகுதி டார்டிக்கு இல்லை என்கின்றனர் மயக்க மருத்துவர்கள். எனவே, அறுவைசிகிச்சைக்குப் பதிலாக, பழுதான வால்வுகளைக் ‘கிளிப்’ போட்டுச் சரி செய்யலாம் என்று முடிவுசெய்கிறார் மருத்துவர் சந்திரா. தென்கிழக்கு ஆசியாவிலேயே முதல் முறையாக மேற்கொள்ளப்பட்ட புதிய சிகிச்சை முறை அது.

### இதயத்தில் இயற்கைக் ‘கதவுகள்’!

வீட்டில் அறைக் கதவுகள் இருப்பதைப் போல் இதயத்திலும் கதவுகள் இருக்கின்றன. ஒரு பக்கமாகவே திறக்கும் இயற்கைக் கதவுகள் இவை. ‘வால்வுகள்’ என்று பெயர். இதயத்தின் வலது மேலறைக்கும் (யூஷ்ஆஜூமி புமிஷஷ்ற்து) கீழறைக்கும் (Right Ventricle) நடுவில் ‘மூவிதழ் வால்வு’ (Tricuspid valve) இருக்கிறது.

இடது மேலறைக்கும் (ஸிளகூ்மி புமிஷஷ்-ற்து) கீழறைக்கும் (ஸிளகூ்மி ளளஜமிஷஷ்-உயிள) நடுவில் ‘ஈரிதழ் வால்வு’ (னிஷ்மிஷழியிஸழியிஸள) இருக்கிறது. இந்த வால்வுகள் இரண்டும் கீழ்நோக்கி மட்டுமே திறப்பதால், மேலறைகள் சுருங்கும்போது, அவற்றிலிருந்து கீழறைகளுக்கு ரத்தம் வரும். ஆனால், கீழறைகள் சுருங்கும்போது இந்த வால்வுகள் மூடிக்கொள்வதால், ரத்தம் மேலறைகளுக்குச் செல்ல முடியாது.

வலது கீழறையில் நுரையீரல் தமனி (Pulmonary artery) புறப்படும் இடத்திலும், இடது கீழறையில் மகாதமனி (Aorta) புறப்படும் இடத்திலும் ‘பிறைச்சந்திர வால்வுகள்’ (Semilunar valves) இருக்கின்றன. இவை மேல்நோக்கித் திறக்கும் வால்வுகள். அதனால், கீழறைகள் சுருங்கும்போது, அவற்றிலிருந்து ரத்தம் மேல் நோக்கித் தள்ளப்படுகிறது. அப்போது நுரையீரல் தமனி வழியாக நுரையீரல்களுக்கும், மகாதமனி வழியாக உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் ரத்தம் செல்கிறது. அதேவேளையில், மேலறைகள் சுருங்கும்போது நுரையீரல் தமனியிலிருந்தும் மகாதமனியிலிருந்தும் ரத்தம் கீழறைகளுக்குத் திரும்பி வர முடியாது. இந்த வால்வுகள் மூடிக்கொள்வதே அதற்குக் காரணம்.

### வால்வுகளில் என்ன பிரச்சினை?

டார்டியின் இதயத்தில் ஈரிதழ் வால்வும், மூவிதழ் வால்வும் பழுதாகியிருந்தன. மருத்துவ மொழியில் சொன்னால், கடுமையான ஈரிதழ் வால்வு ஒழுக்கு (Massive Mitral Valve Regurgitation); மோசமான மூவிதழ் வால்வு ஒழுக்கு (Massive Tricuspid Valve Regurgitation). ஈரிதழ் வால்வுப் பிரச்சினை மூட்டுவாதக் காய்ச்சல் (Rheumatic fever) பாதிப்பால் வருகிறது. மூவிதழ் வால்வுப் பிரச்சினை பெரும்பாலும் வயது மூப்பு காரணமாகவே வருகிறது. டார்டிக்கு ஏற்கெனவே இருமுறை பைபாஸ் அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதால் இதய வால்வுகள் மோசமாகப் பழுதாகியிருந்தன. அதன் விளைவாக, மேலறைகளிலிருந்து கீழறைகளுக்குக் குருதி ஒழுகத் தொடங்கியது. கீழறைகள் சுருங்கும்போது ஈரிதழ் வால்வும், மூவிதழ் வால்வும்மேலறைகளைச் சரியாக அடைத்து, அவற்றிலிருந்து குருதி ஒழுகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமல்லவா? ஆனால், டார்டிக்குச் சரியாக மூடப்படாத தண்ணீர்க் குழாய் ஒழுகுவதைப் போல, மேலறைகளிலிருந்து கீழறைகளுக்கு குருதி ஒழுகி ஒழுகிக் கீழறைகள் இரண்டும் பலூன்போல் வீங்கிவிட்டன. கீழ் இதயத்தின் உந்துவிசை குறைந்துவிட்டது. உடலுக்குள்ளும் நுரையீரல்களுக்கும் தேவையான குருதி செல்ல முடியவில்லை.

### உயிரைக் காப்பாற்றிய புதிய சிகிச்சை

பொதுவாக, பெரும்பாலான பயனாளிகளுக்கு ஈரிதழ்வால்வுமட்டும்பிரதானமாகப்பழுதாகியிருக்கும். அப்போது அறுவைசிகிச்சை மேற்கொள்வார்கள். அல்லது ‘மைட்ராகிளிப்’ (MitraClip) எனும் சிறப்பு கிளிப்பைப் பொருத்திச் சரி செய்வார்கள். ஆனால், டார்டிக்கு வித்தியாசமாக ஈரிதழ் வால்வும் பழுது; மூவிதழ் வால்வும் பழுது. இரண்டையும் ஒரே சமயத்தில் சீராக்கினால்தான் அவருக்கு இதயப் பிரச்சினை தீரும்; உயிர் பிழைக்க வாய்ப்புண்டு.

ஆனால், இந்தியாவில் ஈரிதழ் வால்வைச் சீராக்க மட்டுமே ‘மைட்ராகிளிப்’ உள்ளது. மூவிதழ் வால்வைச் சீராக்கும் கிளிப் அமெரிக்காவில்தான் கிடைக்கிறது. அதை இந்தியாவுக்குவரவழைக்கும்வரை டார்டியின் உடல்நிலை தாங்காது என்ற நிலையில், ஈரிதழ் வால்வைச் சீராக்கும் ‘மைட்ராகிளிப்’பையே மூவிதழ் வால்வைச் சீராக்கவும் பயன்படுத்தலாம் என்று மருத்துவர் சந்திரா சமயோசிதமாக முடிவு செய்தார்.

வேறுபட்ட இரண்டு வால்வுகள் இதயத்தில் ஒரேவேளையில் பழுதாகும்போது, இப்படியொரு சிகிச்சையை மேற்கொள்ள இதுவரை யாரும் முன்வரவில்லை. காரணம், இந்த வால்வுகள் இரண்டும் ஒன்றுபோல் இருப்பதில்லை. அவற்றின் அமைப்பில் வித்தியாசம் உண்டு. ஆனால், மருத்துவர் சந்திரா துணிச்சலுடன் செயல்பட்டார்.

### எப்படிச் சாத்தியமானது?

‘மைட்ராகிளிப்’பை உடலுக்குள் செலுத்தத் தனிக் கருவி இருக்கிறது. அதிலுள்ள வழிகாட்டு வயரின் (Guide wire) முனையில், துணி காயவைக்கும் கிளிப் வடிவத்தில் ஒரு ‘கிளிப்’ பொருத்தப்பட்டிருக்கிறது. டார்டிக்குக் காலில் உள்ள சிரைக்குழாய் வழியாக ஒரு வளைகுழாயை (Catheter) நுழைத்து, அதனுள் வயருடன் கூடிய ‘மைட்ராகிளிப்’பைச் செலுத்தி இதயத்தை நோக்கித் தள்ளினார் மருத்துவர் சந்திரா. அது செல்லும் பாதையை எக்ஸ்-ரேயிலும் மீயொலி அலை ஸ்கேனிலும் (Ultra sound scan) சரிபார்த்துக்கொண்டார்.

மைட்ராகிளிப் இதயத்தை அடைந்ததும், முதலில் ஈரிதழ் வால்வில் அதைச் சரியாகப் பொருத்தினார். பிறகு, மூவிதழ் வால்வில் பொருத்தினார். மூவிதழ் வால்வில் மூன்று இதழ்கள் உண்டு. ஆகவே, அங்கு மட்டும் மூன்று ‘கிளிப்’களைப் பொருத்தினார். ஒழுகும் மூக்கைக் ‘கிளிப்’ கொண்டு அடைத்தால் எப்படி இருக்கும்? கற்பனை செய்துகொள்ளுங்கள். அதுபோலத்தான் டார்டியின் ஒழுகும் வால்வுகளை மருத்துவர் சந்திரா கச்சிதமாக அடைத்தார்.

அதன் பயனால், அவரின் இதயத்தில் குருதி ஒழுக்கு நின்றது. அடுத்த மூன்று நாள்களில் அவருக்கு மூச்சுத்திணறல் உள்ளிட்ட பிரச்சினைகள் குறையத் தொடங்கின. இப்படி, இந்தியாவில் ஒரு மருத்துவரின் சமயோசிதமான முடிவால் இறப்பின் விளிம்பிலிருந்த ஓர் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது. அது, இதய வால்வு அறுவைசிகிச்சை மேற்கொள்ள உடல் தகுதி இல்லாதவர்களுக்குப் புதிய ஒளியைப் பாய்ச்சியுள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# மரக்கறி விலையேற்றத்தைத் தவிர்ப்பதற்கு மாற்றீட்டு பயிர்ச்செய்கை குறித்து ஆராய்வு

நாட்டில் ஏற்பட்டுள்ள மரக்கறி விலையேற்றத்தைத் தவிர்ப்பதற்கான மாற்றீட்டு பயிர்ச்செய்கைகளை யாழ்.மாவட்டத்தில் முன்னெடுப்பது சம்பந்தமாக, யாழ், - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதனின் கோரிக்கைக்கு அமைய விசேட மூலோபாய கலந்துரையாடல் விவசாய அமைச்சில் இடம்பெற்றது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் தற்போது நிலவும் மரக்கறி தட்டுப்பாடு மற் றும் விலையேற்றம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது குறித்த மரக்கறிகளை யாழ்.மாவட்டத்திலிருந்தும் பருவகால அடிப்படையில் உற்பத்தி செய்வதன் ஊடாக இவ்வாறான தட்டுப்பாடுகள் மற்றும் விலைத்தளம்பலை தவிர்க்க முடியும் என யோசனை முன்வைக்கப்பட்டது. இதற்கமைய இவ்வாண்டில் புதிய திட்டங்களை உருவாக்க இச்சந்திப்பில் கலந்துரையா டப்பட்டன. இவற்றுடன் யாழ்ப்பாணத்துக்கே உரிய சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் உற்பத்தியை மேம் படுத்துவது தொடர்பாகவும், யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் திராட்சைப்பழங்களை கொண்டு பழச்சாறு உற்பத்தியை யாழ்.மாவட்டத்திலேயே மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்வது தொடர்பாகவும் ஆராயப் பட்டன. மேலும், யாழ் மாவட்டத்தில் விவசாய அமைச்சின் கீழ் முன் னெடுக்கப்படும் இதர திட்டங்களின் ஊடாக விவசாய உற்பத்திகளை பெறுமதி சேர் உற்பத்திகளாக மாற்றுவது தொடர்பாக விவசாய அமைச்சு கவனம் செலுத்தவுள்ளது.

கடந்தாண்டு இறுதியில் விவசாய அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த போது, விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டன.

விவசாய நிலங்களுக்கு குரங்குகள், கட்டாக்காலி கால்நடைகளால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கான வேலிகள் உள்ளிட்டவற்றை வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டதுடன், யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கான விவசாய மின் இணைப்புக்குரிய கட்டணத்தில் மானியம் வழங்குவது தொடர்பான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், உள்ளூர் விதைகளைப் பாதுகாக்கும் தன்மை விவசாயிகள் மட்டத்தில் குறைவடைந்து செல்வதால் விதைகளை இறக்குமதி செய்யும் நிலை அதிகரித்து செல்வதாக சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் விதைகள் விவசாயிகளுக்குத் தேவையான காலத்தில் வழங்கப்படாததால், நாட்டில் உணவுத்தட்டுப்பாடுகள் ஏற்படுவதாகவும், அதனைப்போக்க உணவுப்பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதால் உள்ளூர் விவசாயிகள் பாதிப்பை எதிர்கொள்கிறார்கள் என்பதும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக, பயறு, உழுந்து உள்ளிட்ட சிறுதானிய உற்பத்திகளை மேற் கொள்ளும் விவசாயிகளுக்கான விதைகள் பெரும்போக அறுவடை முடிவடைந்தவுடன் வழங்கப்படவேண்டிய நிலை யில் அவை காலம் தாழ்த்தி வழங் கப்படுவதால் கோடை காலத்தில் நாட்டில் உழுந்து பயறுக்கான தட்டுப்பாடு உருவாகும் நிலை தொடர்பில் இக்கூட்டத்தில் விவரிக்கப்பட்டது.

மேலும், கடந்தாண்டு இறுதியில் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கவௌகொண்டுவரப்பட்ட விதைஉருளைக்கிழங்குகள் பாவனைக்கு உதவாத நிலையில் அழிக்கப்பட்டமையை சு ட் டிக்காட்டிய



அங்கஜன் இராமநாதன், இதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினார். இதன்போது கருத்து தெரிவித்த மாகாண விவசாய பணிப்பாளர், யாழ்ப்பாணத்தில் விவசாயத்துக்குத் தேவையான விதைகளைப் பாதுகாத்து பராமரிக்கக்கூடிய வகையில் குளிரூட்டப்பட்ட களஞ்சியமொன்றை அமைப்பதால், விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விதைகளை வழங்க முடியும் என யோசனை முன்வைத்தார். இதற்காக அச்சுவேலியில் இருக்கும் களஞ்சியத்தை குளிரூட்டப்பட்ட களஞ்சியமாக மாற்றியமைக்க முடியும் எனவும் யோசனை தெரிவித்தார். இதனை உடனடிக் கவனத்தில் எடுத்துக்கொள்வதாக விவசாய அமைச்சர் தெரிவித்தார். இவற்றுடன் விவசாய கிணறுகள், குளங்கள், விவசாய வீதிகளை புனரமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டதுடன், யாழ்.மாவட்டத்தில் விவசாய மாதிரிக்கிராமமொன்றை உருவாக்கி அனைத்து வகையான உணவு விவசாய, கால்நடை வளர்ப்பு, ஏற்றுமதி விவசாய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் கடந்த 2018 காலப்பகுதியில் விவசாய அமைச்சில் அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் இணைந்து பணியாற்றியது போன்று, தற்போதைய நாட்டு நிலமையை கருத்தில் கொண்டும் வடக்கின் விவசாய புரட்சியைக் கட்டமைக்கும் வகையிலும் இப்பணிகளை முன்னெடுக்க தயாராக இருப்பதாக அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

இச்சந்திப்பில், விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் தலைவர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் செயலாளர்கள், மாவட்ட மற்றும் பிராந்திய விவசாய அதிகாரிகள், விவசாய அமைச்சின் திட்டப்பணிப்பாளர்கள் உள்ளிட்டோரும், சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக யாழ்.மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## மரக்கறிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகின்றது. நாம் ஆராய்ந்து பார்த்ததில் அவ்விதமான நிலைமைகள் இல்லை.

உதாரணமாக பார்க்கின்றபோது, விவசாயிகளிடமிருந்து கரட் ஆயிரம் ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. ஆனால் அவர்களிடத்தில் கரட்டை வழங்குவதற்கு இருப்பில்லை. இந்நிலைமைகள் பெப்ரவரியாகின்றபோது வழமைக்குதிரும்பும் என்றார்.

## ஆளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சானக்க தர்ம விக்ரம தெரிவித்ததாவது:

கடந்த 9 ஆம் திகதி முதல் 5 நாட்களாக பல்வேறு கட்டங்களின் கீழ் சுகாதார தொழிற்சங்கத்தினரால் அடையாள பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டிரு ந்தது.

மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட 35,000 ரூபாய் கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரியே இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு மற்றும் நிதி அமைச்சுகளுடன் கலந்துரையாடிய போதிலும், இதுவரை சாதகமான பதில் எதுவும் எட்டப்படவில்லை. எனவே எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கையை ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், அதற்கும் அரசாங்கம் உரிய தீர்வு வழங்காது விடுமாயின் முதலாம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றார்.

## தொழிற்சங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் வகையில் தான் மூன்று நாட்கள் நாம் தொழிற்சங்க எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெ டுத்தோம்.

இந்த நடவடிக்கையின் ஊடாக அரசாங்கத்தின் இரகசியமான நடவடிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கோபமடைந்துள்ள அரசாங்கம் பழிவாங்கும் வகையில் ஊழியர்களை இடைநிறுத்தியுள்ளது.

எமது தொழிற்சங்கப் போராட்டத்தின் காரணமாக அரசாங்கம் அச்சமடைந்துள்ளது. நாம் அரசாங்கத்தின் தனியார் மயப்படுத்தும் ஏதேச்சதிகார நடவ டிக்கைக்கும், ஊழியர்கள் இடைநிறுத்தப்பட்டமைக்கும் எதிராக போராட்டத்தினை முன்னெடுப்போம் என்றார்.

## மக்கள் தெரிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி மாவட்ட அமைப்பாளர் உள்ளிட்டவர்களை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் இவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மாவீரர் வாரத்தில் கைது செய்யப்பட்ட மிஞ்சிய அரசியல் கைதிகள் மற்றும் சிறையில் இருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் அவரது மகன் ஜனநாயகப் போராளி அமைப்பின் நகுலேஸ் ஆகியோரை சந்தித்தேன்.

நகுலேஸினுடைய வழக்கு அறிக்கை சட்ட மா அதிபருக்கு அனுப்பப்பட்டு அவர்கள் சார்ந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அந்த வகையில் அடுத்த வழக்கு தவணையில் அவரைப் பிணையில் விடுவிப்பது தொடர்பாக வெளிப்படுத்தப்படும். அதேவேளை எமது கட்சி மாவட்ட அமைப்பாளர் அவரது மகன் தனுஜனை ஆகியோரை கடந்த வாரம் பயங்கரவாத தடுப்பு பிரிவு விசாரணை செய்து அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வரமுடியாத விடயங்கள் அந்த அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்தச் சட்டத்தின் கீழே குற்றங்களாக கருத முடியாத காரணங்களை வைத்து அந்த வழக்குகளை தொடரமுடியாது. அவ்வாறான நிலையில் இரண்டு மாதங்களாக அவர்களைச் சிறைச்சாலையில் அடைத்துவைத்திருப்பது ஒரு அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

அது மட்டுமல்ல இலங்கை அரசினுடைய உண்மையான இனவாத நிகழ்சி நிரல் இதன் மூலம் அம்பலப்பட்டுள்ளது. ஆளும் தரப்பு இரட்டை வேடம் போடுகின்றது. நினைவு கூரல்களுக்கு அனுமதி என்று உலகத்திற்குக் கூறிக்கொண்டு தங்களை நல்லபிள்ளைகளாகக் காண்பித்து சர்வதேசத்துக்கு நடித்துக்கொண்டு மறுபக்கம் நினைவுகூரியவர்களைக் கைது செய்து அவர்களைப் பழிவாங்கும் கோணத்தில் செயற்படுகின்றது. அது எமது அமைப்பாளர்களின் கைது மூலம் வெளிப்பட்டுள்ளது. அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்த விடயங்களை வருகின்ற மார்ச் மாதம் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவையில் அம்பலப்படுத்தி அதனை நேரடியாகப் பதிவு செய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம். அதேநேரம், ரணில் விக்கிரமசிங்கவின் கடைசிக் கனவு, தான் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியாக வேண்டும் என்பதுதான். அந்த கனவு சாத்தியமற்றது. ஏன் என்றால் இந்த முறை ஜனாதிபதி தேர்தலில் வாக்குகள் மூன்றாகப் பிரியப்போகின்றன. அதனால் ரணிலுக்கு வாக்குகள் குறையும். அவர் தனிநபராக ஐக்கிய தேசிய கட்சியினுடைய தலைவராக மட்டும் இருந்திருந்தால் சிலவேளை அவருக்கு சற்றே அதிகமாக வாக்குகள் கிடைத்திருக்கலாம்.

அவர் ராஜபக்சக்களுடன் இணைந்துள்ளமையால் அந்த வாக்குகள்கூட அவருக்குக் கிடைக்காது. தமிழ் மக்களிடையே தமிழ் தலைவர்களே ரணில் நல்லவர் அவர் வந்தால் எல்லாம் செய்வார் என்று ஏமாற்றி வைத்துள்ளனர். ரணில் வந்ததின் பின்னர் அவரின் உண்மையான முகத்தைக் காட்டிவிட்டார். இதனைத் தமிழ் மக்கள் உணர்ந்துள்ளனர். ஆகவே மீண்டும் ரணிலால் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது. அதேபோன்று தமிழ்த் தலைவர்களும் ரணிலை வைத்து ஏமாற்ற முடியாது.

கிழக்கில் திருகோணமலை நகரில் வாழுகின்ற 90 சதவீதமான தமிழ் மக்களை வெளியேற்றுவதற்கான திட்டமாக மெகா சிற்றி என்ற திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்காவால்தான் இது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது இதனால் திருகோணமலை தமிழருடைய கையில் இருந்து பறிபோயுள்ளது. இந்த இரண்டரை வருடத்தில் ரணில் கோட்டாவை விட மிக மோசமாக ஜனநாயகத்தை மறுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றார் என்றார்.

## 15 காசாளர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுகர்வோருக்கு இடையூறு ஏற்படும் வகையில் அவர்கள் செயற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாலும், சுற்றிக்கையினை மீறும் வகையிலும் செயற்பட்டதாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சபை மேலும் தெரிவித்துள்ளது.

மின்சார சபையை தனியார் மயமாக்கப் போவதற்கு எதிர்ப்பு வெளியிட்டு தொடர்ச்சியாக மின்சார தொழிற்சங்கங்கள் எதிர்ப்புப் பரப்புரையை முன்னெடுத்திருந்தன.

இதன்படி, மின்சார சபையின் நிர்வாகத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை மீறும் வகையில் சேவைகளுக்கு இடையூறு விளைவிக்கும் ஊழியர்களைப் பணி இடைநீக்கம் செய்து உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு எடுக்குமாறு மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இலங்கை மின்சார சபை நிர்வாகத்திற்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, ஐக்கிய மக்கள் சக்தி யினர் பொருளாதாரக் கொள்கைகள், பொருளாதார மீட்சிக்கான எதிர்காலத்திட்டங்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியினர் சர்வதேச நாணய நிதியத்துக்கு தெளிவுபடுத்தினார்கள்.

குறிப்பாக பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் தங்களுடைய கட்சியானது, மக்கள் மீது சுமையற்ற வாழ்விய லை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்ட திட்டங்களைக் கொண்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியினர் குறிப்பிட்டனர்.

இந்நிலையில், இறுதியாக கருத்து வெளியிட்ட சஜித் பிரேமாச, நாம் மக்கள் ஆணைபெற்ற அரசாங்கமாக ஆட்சியில் அமருகின்றபோது, சர்வ தேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தினை மீளாய்வு செய்து மறுசீரமைப்போம். இந்த உடன் பாட்டில் மக்களின் மீது நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு இத்தகைய மோசமான நிலைமைகளை சந்தித்தமைக்கு நிறைவேற்று அதிகார முறைமையே காரணமாக உள்ளது. இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முழுமையாக நீக்க வேண்டும்.

இல்லாது விட்டால் நாட்டின் நிலைமைகள் மிகவும் மோசமானதாக மாறும். தற்போதைய நிலைமைகளை விடவும் அதல பாதாளத்துக்கே செல்லும். அது எதிர்காலத்திற்கு பேராபத்தாக மாறும்.

ஆகவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கும் எந்தவொரு வேட்பாளருக்கும் நான் நிபந்தனையின்றி ஆதரவளிப்பதற்கு தயாராகவே உள்ளேன்.

அதேநேரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்பார்த்துள்ள நிலையில் அவர் அவ்விதமான வாக்குறுதியை வழங்குவாராக இருந்தால் நான் இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரவளிப்பேன் என்றார்.

# யுக்திய நடவடிக்கைக்கு எதிரானவர்களின் பெயர்ப் பட்டியல் விரைவில் வெளிவரும்

## அமைச்சர் டிரான் அலஸ் கூறுகிறார்



யுக்திய நடவடிக்கை காரணமாக கடந்த மாதத்தில் குற்றச் செயல்கள் 17 சதவீதமாகக் குறைந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

யுக்திய நடவடிக்கைக்கு எதிராக இருப்பவர்கள் யார்? அதற்கான காரணங்கள் எவை? என்பது தொடர்பான தகவல்கள் விரைவில் பெயர் பட்டியலுடன் வெளியிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# கராப்பிட்டிய வைத்தியசாலை சம்பவம்: விசேட வைத்தியருக்கு விளக்கமறியல்

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் கனிஷ்ட ஊழியர் ஒருவரைத் தாக்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட விசேட வைத்தியர் ஒருவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி நீதிவான் உத்தரவிட்டார்.

வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவின் தலைவராகப் பணியாற்றிய 61 வயதான விசேட வைத்தியர் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (05)

# மோட்டார் சைக்கிள் - லொறி மோதியதில் 15 வயது மாணவன் பரிதாபகரமாகச் சாவு

புத்தளம், மதுரங்குளி, விருதோடை பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று லொறியுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச்சென்ற பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என மதுரங்குளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் மதுரங்குளி, விருதோடை பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயது மாணவனாவார்.

புதன்கிழமை இரவு மதுரங்குளி விருதோடை பிரதேசத்தில் லொறி ஒன்று வீதியிலிருந்து திரும்ப முற்பட்ட போது அதே வீதியில் அதிக வேகத்தில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் பதிவு செய்யப்படாதது என்பதோடு சம்பவத்தின் போது மோட்டார் சைக்கிளின் விளக்கு அணைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த மாணவன் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதுரங்குளி பொலி-ஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

## அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தச் சவாலான ஆண்டில் வருமானம் மற்றும் செலவுகளில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. 2022ஆம் ஆண்டில் ஆளும் தரப்பின் மொத்த வரி வருமானம் 1,751 பில்லியன் ரூபாயாகும். அதில் 1265 பில்லியன் ரூபாய் அதாவது 72% அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்காக செலவிடப்பட்டது. மேலும், சமுர்த்தி உட்பட வறிய மக்களுக்கான நலன்புரி கொடுப்பனவுகளுக்காக 506 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. வரி வருமானம் இந்த இரண்டு செயல்பாடுகளுக்கு செலவிடவே போதுமானதாக உள்ளது.

மேலும், நாம் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்த வேண்டும். வட்டியைச் செலுத்த 1,065 பில்லியன் ரூபாய் செலவிடப்பட வேண்டும். மேலும், 715 பில்லியன் ரூபாய் மூலதனச் செலவினங்களுக்காகக் கடன் பெற்றுச் செலவிடப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாற்றில் சுதந்திரத்திற்குப் பின்னர் 5 வருடங்களைத் தவிர முதன்மைக் கணக்கில் மேலதிக இருப்பு எதுவும் இருக்கவில்லை.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நேரடி மற்றும் மறைமுக வரிகள் மூலம் 1,550 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது. சுங்கத் திணைக்களம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சுங்க வரிகள் மூலம் 922 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது. மதுவரித் திணைக்களம் 169 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது. மோட்டார் வாகன திணைக்களம் 20 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டியுள்ளது. 219 பில்லியன் ரூபா வரி அல்லாத வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. 16 பில்லியன் ரூபா நன்கொடைகளாகப் பெறப்பட்டுள்ளன. பல்வேறு வைப்புத்தொகைகள் மூலம் 303 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

மக்களிடமிருந்தும் மற்றும் ஏனைய அனைத்து வகையிலும் 3,201 பில்லியன் ரூபாவை 2023 ஆம் ஆண்டில் திறைசேரி பெற்றுள்ளது. 2022 ஆம் ஆண்டை விட அதீத முன்னேற்றம் என்பதைக் கூற வேண்டும். 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டில் 1,000 பில்லியன் ரூபாயால் வருமானம் அதிகரித்துள்ளது. அதைவிட வேகமாக செலவுகள் அதிகரித்துள்ளன.

அரச ஊழியர் சம்பளம், நலன்புரி மற்றும் நிவாரணம் உள்ளிட்ட விடயங்களுக்காக 2,160 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 2,263 பில்லியன் ரூபாய் வட்டி மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில், நாளாந்த செலவுகளுக்காக 4,394 பில்லியன் ரூபாய்களை செலவிட்டுள்ளது. அந்த ஆண்டில் அரச வருமானம் 3,201 பில்லியன் ரூபாய். எனவே, 2023 ஆம் ஆண்டில் அரசின் அன்றாட நடவடிக்கைகளை நடத்துவதற்கு போதுமான வருமானம் பெறப்படவில்லை.

ஆனால் 2023ஆம் ஆண்டில் 7,727 பில்லியன் ரூபா திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. மூலதனச் செலவுகள் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தும் வகையில் 8,898 பில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. திறைசேரியிலிருந்து 13,292 பில்லியன் ரூபாய் வெளியே சென்றுள்ளது. ஆனால் அரசாங்கத்திற்கு கிடைத்த நிதியின் அளவு 3,201 பில்லியன் ரூபா மாத்திரமே ஆகும்.

2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அரசு 10,091 பில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுள்ளது. இந்தக் கடன்கள் உள்நாட்டில் திறைசேரி பத்திரங்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகள் மூலம் பெறப்பட்டுள்ளன.

இதன்படி, 2024ஆம் ஆண்டுக்கான கடன் மறுசீரமைப்பு குறித்து கடன் வழங்குநர்களுடன் பேச்சு நடத்தி இறுதி ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதன் பின்னர் பெப்ரவரி மாதம் முதல் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.

இந்த ஆண்டு வீதிகளை அபிவிருத்தி செய்ய உலக வங்கி கடன் உதவியின் கீழ் 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுள்ளோம். அத்துடன் கிழக்கு மாகாணத்தில் வீதிகளை புனர்நிர்மாணம் செய்ய சவூதி அரேபியாவின் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. இந்த சிரமங்களுக்கிடையில் கூட மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்திக்காக மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவராக உள்ள நாடாளுமன்ற உறுப்பினருக்கு 150 மில்லியன் ரூபாயும் சிறிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 50 மில்லியன் ரூபாய் கிராமிய அலுவல்கள் அமைச்சின் ஊடாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. தடைப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் ஆரம்பிக்க நாம் தயாராக உள்ளோம் என்றார்.

# தம்மிக்கப் பெரேராவுடன் எந்தவொரு கட்சியும் இணக்கப்பாடு எட்டவில்லை

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு



அனுபவமில்லாதஜனாதிபதியைநியமித்து நாட்டை மீண்டும் ஆபத்தில் தள்ளமுடியாது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நான்கட்சியின்தீவிர உறுப்பினர். எனக்குத் தெரிந்தவரையில், ஜனாதிபதி வேட்புமனு தொடர்பில் தம்மிக்க பெரேராவுடன் ஒரு கட்சி என்ற ரீதியில் உடன்பாட்டை எட்டவில்லை. அவ்வாறானகலந்துரையாடல்இடம்பெற்றதாக எமக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் ஊடகவி-யலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நிபுன ரணவக்க, தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலி கமகே உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன்போதுஅமைச்சர்ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் -

கேள்வி: இன்றைய நிகழ்ச்சி பற்றி பேசினால்...?

பதில்:அரசாங்கத்தைநிறுவியமுதல்மூன்று வருடங்களில் நாம் பல நெருக்கடிகளை எதிர்கொண்டோம். கொரோனாவால் இரண்டு வருடங்கள் வேலை செய்ய முடியவில்லை. அப்போது, மக்களின் உயிரைக் காக்கப் பாடுபட்டோம். அதன் பிறகு போராட்டத்தால் ஆறு, ஏழு மாதங்கள் வேலை செய்ய முடியவில்லை. வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்போது தற்போதைய ஜனாதிபதி கிராமிய மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்எனத்தெரிவித்தார். அதன்படி, பிரதமர் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழு வின் முடிவுகளின்படி, இந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம்.

கேள்வி: எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மொட்டின் வேலைத்திட்டம் எவ்வாறு உள்ளது?

பதில்: மொட்டு ஒரு கட்சி என்ற ரீதியில் வேட்பாளரை முன்வைப்பதா, இல்லையா என்பது குறித்து இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. அது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். உள்ளூர் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவர்களை நியமிக்க பொதுத் தேர்தல் நடத்தப்படுகிறது. ஆனால், நாட்டின் தேசிய பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்படுகிறார். உதாரணமாக, 2005 இல், போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக மஹிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டார். அத்துடன் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த மக்கள் மைத்திரிபாலவுக்கு வாக்களித்தனர். ஆனால் அவர் செய்தாரா, இல்லையா என்பதை மக்கள் முடிவு செய்வார்கள். கோட்டாபய ராஜபக்ஷ தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அழைத்து வரப்பட்டார்.

கேள்வி: மொட்டில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை முன்னிறுத்த வேண்டும் என்று நீங்கள் கூறியிருந்தீர்கள். இது கட்சியின் கருத்தா...?

பதில்: அது எனது தனிப்பட்ட கருத்து. இன்று நாட்டில் பெரும் நெருக்கடியாக இருப்பது பொருளாதார நெருக்கடி. இன்று பேசிக்கொண்டிருக்கும் தலைவர்கள் அனைவரும் ஓடிப்போயிருந்த நேரத்தில், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே ஏற்றுக்கொண்டார். எனவே, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றி நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என என்னைப் போன்ற பலர் நம்புகின்றனர்.

அதன்பிறகு, திருடர்களைப்பிடிப்பவர்களை, வாய்ப்பேச்சுவீரர்களைநியமியுங்கள். ஆனால், தற்போதைய ஜனாதிபதிக்கு நாட்டின் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என நான் நம்புகிறேன். ஏனெனில், அனுபவமில்லாத ஜனாதிபதியை நியமித்து நாட்டை மீண்டும் ஆபத்தில் தள்ள முடியாது.

கேள்வி: அப்படியென்றால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மொட்டின் ஆதரவைப் பெறுவாரா.....?

பதில்: இல்லை, என் கருத்தைச் சொன்னேன். மொட்டு, கட்சி என்ற ரீதியில் எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கும்.

கேள்வி: ஆனால் தம்மிக்க பெரேரா ஜனாதிபதி தேர்தலில் மொட்டில் களமிறங்கப் போவதாகக் கூறுகிறார்....?

பதில்: நான் கட்சியின் தீவிர உறுப்பினர். எனக்குத் தெரிந்தவரையில், ஜனாதிபதி வேட்புமனுதொடர்பில்தம்மிக்கபெரேராவுடன் ஒரு கட்சி என்ற ரீதியில் அவ்வாறான உடன்பாட்டை எட்டவில்லை. அவ்வாறான கலந்துரையாடல் இடம்பெற்றதாக எமக்கு அறிவிக்கப்படவில்லை.

கேள்வி: ஜனாதிபதி மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரா...?

பதில்: அவர் கேட்பாரா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர் கேட்டால் அவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

கேள்வி: அரச நிறுவனங்களில் வேலை நிறுத்த போராட்டங்கள் நடைபெறுகின்றன. இதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்.....?

பதில்: தற்போது நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். சுற்றுலா பயணிகள் வருவதைத் தடுக்கப் போராட வேண்டும். அவர்கள் வேலைநிறுத்தம் செய்ய விரும்புகிறார்கள். அப்போது அந்த நாட்டுக்கு அந்நியச் செலாவணி கிடைக்காது. அப்போது பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும். அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப தொழிற்சங்கங்கள் செயற்பட்டு நாடு வீழ்ச்சியடைந்தால் மீண்டும் வரிசை யுகம் உருவாகும். இந்த நிலையை மக்கள் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். ஒரு முறை அவர்கள் போராடி அரசியல்வாதிகளின் வீடுகளை எரித்தனர். அப்படியானால், வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் மக்களுக்கு பொது மக்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும்.

கேள்வி:தொழிற்சங்கங்கள்தடைசெய்யப்பட வேண்டும் என்று சிலர் கூறுகின்றார்கள்...?

பதில்: தொழிற்சங்கங்கள் நல்லது. தொழிற்சங்கங்கள் தங்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். ஆனால் இன்று தொழிற்சங்கங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரல்களின்படி செயற்படுகின்றன. அது தவறு. - என்றார். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILE zone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

காலைக்கதிர்
Kalaikkathir

# 1, 700 ரூபாய் சம்பளம் சாத்தியமற்றது முதலாளிமார் சம்மேளனம் இறுக்கம்

## பேச்சு பிற்போடப்பட்டது

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரம் தொடர்பான மூன்றாவது சுற்றுப் பேச்சு பிற்போடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் ஆகக்குறைந்தது 1700 ரூபா சம்பள அதிகரிப்புடன் உற்பத்தித்திறன் கொடுப்பனவும் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது இலக்கு என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சட்ட ஆலோசகர் கே. மாரிமுத்து தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள தொழில் திணைக்களத்தில் இடம்பெற்ற முத்தரப்பு பேச்சு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

தொழில் ஆணையாளர் தலைமையில் பெருந்தோட்ட தொழிலாளர் சம்மேளனத்துக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் நடைபெற்ற இந்தப் பேச்சு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரம் தொடர்பில் இதுவரை இரண்டு சுற்றுப்பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் தொழிற்சங்கங்களின் சார்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸானது தொழிலாளர்களுக்கு திருப்தி அளிக்கக்கூடிய சம்பள அதிகரிப்பைக் கோரியிருந்தது. அதேவேளை குறித்த சம்பள அதிகரிப்பு உடன்படிக்கை கூட்டுஒப்பந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படுமாயின் அதற்கும் ஒத்துழைப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் கடந்த வருட இறுதியில் இந்த விவகாரம் ஜனாதிபதியிடம் எடுத்து செல்லப்பட்டது. இதையடுத்து தோட்டத்தொழிலாளர்களுக்கு 1700 ரூபாவையேனும் வழங்க முடியுமா என்பது தொடர்பில் டிசெம்பர் 30 ஆம் திகதிக்குள் பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் அறிவிக்க வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் புதன்கிழமை இடம்பெற்ற முத்தரப்பு பேச்சின்போது 1700 ரூபா என்ற சம்பள அதிகரிப்பை வழங்க முடியாது என பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்தது. மேலும் கூட்டு ஒப்பந்த முறைக்கு மாறாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவித்திருந்ததுடன் அடிப்படை சம்பள அதிகரிப்புக்கு மாறாக உற்பத்தித்திறன் கொடுப்பனவு என்ற அடிப்படையில் புதிய கொடுப்பனவு ஒன்றை வழங்குவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. எனினும் அந்த கொடுப்பனவு தொகை எவ்வளவு என்பதை அறிவிக்கவில்லை.

முதலாளிமார் சம்மேளனத்தின் இந்த யோசனைக்கு தொழிற்சங்கப் பிரதிநிதிகளான நாம் மறுப்பு தெரிவித்ததுடன் ஜனாதிபதியின் அறிப்புக்கிணங்க ஆகக்குறைந்தது 1700 ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதைத் திட்டவட்டமாக தெரிவித்தோம். இதையடுத்து தொழில் ஆணையாளர் குறித்த பேச்சை பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைத்ததாகத் தெரிவித்தார்.

தொழிற்சங்கங்களின் சார்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு, தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டமை குறிப்பி டத்தக்கது. (05)

# ரூ. 11,500 பெறுமதியான போலி பணம் சிக்கியது

## சாரதியும் கைது

11,500 ரூபா பெறுமதியான போலி நோட்டுக்களுடன் வான் சாரதி ஒருவர் நல்லதண்ணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வலஸ்முல்லை பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடைய வான் சாரதியாவார்.

சட்டவிரோத போதைப்பொருள் ஒழிப்புக்கான யுக்திய நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட சோதனையில் நல்லதண்ணி பிரதேசத்தில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடத்திலிருந்து 1,000 ரூபா பெறுமதியான 11 போலி நோட்டுக்களும் 500 ரூபா பெறுமதியான போலி நோட்டு ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் வானில் வலஸ்முல்லையில் இருந்து சிவனொளிபாதமலை நோக்கி யாத்திரை குழுவினருடன் பயணித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# சூரியா குழுமத்தின் மற்றொரு சிறந்த உற்பத்தியான சாம்பிராணி அறிமுகம்



40 ஆண்டுகள் வியாபார உலகில் பாரம்பரியம் மிக்க சூரியா குழுமத்தின் மற்றுமொரு உற்பத்தியான சூரியா சாம்பிராணி இன்று யாழ்ப்பாணம் வர்த்தக கண்காட்சியில் வைத்து அற்முகம் செய்துவைக்கப்பட்டது. தமிழர்களின் பாரம்பரியத்துடன் இணைந்து தனது தனது வியாபார முன்னெடுப்புகளை செய்துவரும் சூரியா நிறுவனம் தனது புதிய உற்பத்தியினை யாழ்ப்பாணத்தில் இருந்து நாட்டிற்கு அறிமுகப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சப் இன்ஸ்பெக்டரின் துப்பாக்கி வெடித்து லொறிச் சாரதி இறப்பு

சப்- இன்ஸ்பெக்டரின் துப்பாக்கி வெடித்ததில் சாரதி ஒருவர் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் வியாழக்கிழமை மாலை தம்பலஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நாரமல பிரதேசத்தில் பொலிஸாரின் உத்தரவை மீறிச் சென்ற சிறிய ரக லொறி ஒன்றை நாரமல பொலிஸ் உத்தியோகத்தர்கள் துரத்திச் சென்று தடுத்து நிறுத்தியுள்ளனர்.

பின்னர், குறித்த சாரதியை சோதனை செய்தபோது, சப்-இன்ஸ்பெக்டரின் துப்பாக்கி வெடித்ததில் சாரதி கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூல் இன்று கான்பராவில் வெளியீடு

ஆஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடக பணியை கௌரவிக்கும் முகமாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் இன்று வெளியிடப்படவுள்ளது.

தினகரன்பத்திரிகையின்முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ.

சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவாக "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் இந்த நூல் வெளியிடப்படுகின்றது. மாலை 4.30 மணிக்கு நிகழ்வுதொடங்கும்.

கன்பராவில் உள்ள மூத்த தமிழ் பிரஜைகள் சங்க மண்டபத்தில் (Tamil Senior Citizen Hall,11 Bromby Street, Isaacs ACT 2607) சட்டத்தரணி, இலக்கிய ஆர்வலர், எழுத்தாளர் எனப் பன்முகத்தன்மை வாய்ந்த க. திருவருள் வள்ளல் தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப்பதித்துக்கொண்டவர்.

தினகரன் பத்திரிகையில் நீண்ட காலம்பிரதமஆசிரியராகபணியாற்றிய, கலாசூரி இ.சிவகுருநாதன் மிக இலகுவானமொழியில்எல்லோருக்கும் புரியக்கூடியவகையில்கருத்துக்களை சொல்வதில் வல்லவர்.

இந்நிகழ்வில் மூத்த எழுத்தாளர் லெ.முருகபூபதி நூலை அறிமுகம் செய்து சிறப்புரை வழங்குவார். அதன்பின் நிமலன் கார்த்திகேயன், இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதனைப் பற்றிய சிறப்புரை நிகழ்த்துவார். தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி சிறப்புரையை எழுத்தாளரும, இலக்கிய ஆர்வலருமான சுந்தரதாஸ் ஆற்றுவார்.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்றுவரை அவரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக நிலை நிறுத்தியது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் நூலின் தொகுப்பாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்குவார்.

இதன் பின் இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, தொகுத்து வழங்கும் சின்னத்துரை மயூரனின் நன்றியுரையுடன் இறுதியாக விழா நிறைவு பெறும். தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்றுவரைஎவராலும்மறக்கமுடியாத ஆளுமைஉள்ளவராகதொடர்கின்றது என்பது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக (08/08/2003) "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் இந்த நூலை 'ஐங்கரன் விக்கினேஸ்வரா' தொகுத்துள்ளார்.

# உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதனூடாக சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



சுயதொழில் முயற்சிகளை விருத்தி செய்வதன் ஊடாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து முயற்சியாளர்களின் சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஒவ்வொரு குடிமகனின் பங்களிப்பு இருப்பதற்கு ஏதுவான நிலைமை உருவாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் சுயதொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் சுயதொழில் முயற்சியாளர்கள் தாம் எதிர் நோக்கியுள்ள தொழில்சார் நடைமுறை பிரச்சினைகளையும், வங்கிகள் ஊடாக கடன் வசதிகளை பெற முற்படும் போது ஏற்படும் இறுக்கமான நடைமுறைகளால் ஏற்படும் அசௌகரியங்கள் குறித்தும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த சுயதொழில் முயற்சியாளர்களின் கருத்துக்களில் அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா-உள்ளூர்உற்பத்திகளைமேம்படுத்துவதற்கான முதலீடுகளை எதிர்பார்க்கின்ற சுயதொழில் முயற்சியாளர்கள் அதற்கான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதற்கான ஒத்துழைப்பினையும்வழிகாட்டல்களையும்வழங்க முடியும் எனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முற்சிகளை ஊக்குவிப்பதற்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இருந்து நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகளையும் வழங்க முடியும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் துறைசார் அதிகாரிகள், வங்கிகளின் முகாமையாளர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



# வாக்காளர்களின் பட்டியலுக்கு ஏற்ப குடும்பங்களின் விவரம் பெறப்படும்

## என்கிறார் பதில் பொலிஸ் மா அதிபர்

வாக்காளர் பட்டியலுக்கு ஏற்ப ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களின் விவரங்களையும் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

ஒருவர் வசிப்பிடத்தை விட்டு வெளியேறினாலோ அல்லது புதிய வீட்டுக்குச் சென்றாலோ அந்த நபரின் அனைத்துத் தகவல்களும் சமூக பொலிஸ் குழுக்களால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட வேண்டும் எனவும் பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# அனைத்து இலங்கையர்களுக்கும் ஈ –கடவுச்சீட்டு விமான நிலையத்தில் பயோமெட்ரிக் சோதனை

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயோமெட்ரிக் தானியங்கி முக அடையாளம் காணும் அமைப்பு மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் ஈ– கடவுச்சீட்டு ஆகியவற்றின் மூலம் இலங்கை பாதுகாப்பு மற்றும் பயணத்திறனை அதிகரிக்கின்றது.

குறித்த அமைப்பை விமான நிலையம் பொலிஸுடன் இணைந்து நிறுவியுள்ளது.

வரும் வாரங்களில் விமான நிலையம் தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தும், உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் அனைத்து பயணிகளுக்கும் கட்டாய தானியங்கி முக அடையாளம் காணும் அமைப்பை அறிமுகப்படுத்துகிறது.

அதில் கைரேகை மற்றும் புகைப்படம் ஸ்கேன், துல்லியமான அடையாளத்தை உறுதி செய்தல் மற்றும் விமான நிலைய பாதுகாப்பை மேலும் பலப்படுத்துதல் ஆகியவை அடங்கும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர் இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

மின்னணுமுறையிலானகடவுச்சீட்டுகளை(ஈ–கடவுச்சீட்டு) வழங்குவதற்கான முதற் கட்ட நடவடிக்கையை திணைக்களம் நிறைவுசெய்துள்ளதாகவும், தற்போது கொள்முதல் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து இலங்கை பிரஜைகளும் இந்த வருட இறுதிக்குள் பாரம்பரிய காகித பதிப்புகளுக்கு பதிலாக இ - கடவுசீட்டுக்களைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்துள்ளார். (05)

# மேலதிக வகுப்புகளை நடத்திய 51 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

மத்திய மாகாண ஆளுநரின் சுற்றறிக்கைகளை மீறி பணத்திற்காக மேலதிக வகுப்புகள் நடத்திய 51 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் வேறு பாடசாலைகளுக்கு மாற்றுவதற்கு மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வாறு மேலதிக வகுப்புகளை நடத்தியதாகக் கூறப்படும் ஆசிரியர்கள் கண்டி, ஹகுரான்கெத, ஹற்றன், வலப்பனை ஆகிய பகுதிகளுக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களாவர்.

குறித்த ஆசிரியர்கள் தங்களது பாடசாலைகளில் கல்வி கற்கும் உயர் தர , சாதாரண தர மற்றும் ஆரம்ப பாடசாலை மாணவர்களிடம் கட்டணம் அறவிட்டு மேலதிக வகுப்புகளை நடத்தியுள்ளனர்.

இந்த ஆசிரியர்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (05)

# சட்டத்தை மீறியமைக்கு உச்சபட்ச தண்டனை பெற்றுத் தந்தாலே தீர்ப்பு முழுமையடையும்

## அருட்தந்தை மா.சத்திவேல் சுட்டிக்காட்டு



சட்டத்தை மீறியமைக்கு உச்சபட்ச தண்டனையை பெற்றுக் கொடுத்தால் மட்டுமே தீர்ப்பு முழுமையடையும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சதமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கொலை வழக்கொன்றில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு தூக்குத் தண்டனைக் கைதியாக இருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை சட்டத்திற்கு முரணான வகையில் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்தமையை இரத்து செய்து குற்றவாளிக்கு தண்டனையை நிறைவேற்றுமாறு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இலங்கை வரலாற்றில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாக அடையாளப்படுத்தப்படும்.

குறுகிய அரசியல் காரணங்களுக்காக அதிகார துஷ்பிரயோகம் செய்த முன்னாள் ஜனாதிபதியும் அதற்கு துணை நின்றவர்களும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். உரிய தண்டனை தீர்ப்பளிக்கப்பட வேண்டும். அதுவே ஜனநாயக நாட்டில் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

முன்னாள் ஜனாதிபதிகள் கட்சி அரசியலை பலப்படுத்துவதற்காகவும், குடும்ப அரசியலை நிலைப்படுத்துவதற்காகவும், அரச சொத்துக்களையும், வளங்களையும் தமக்கும், தம்முடையவர்களுக்கும் பகிர்ந்து கொள்ளவும் அதிகாரத்தை ஊழல் நிறைந்ததாக்கி சட்டத்தைக் கையில் எடுத்து செயற்பட்டுள்ளனர் என்பது மக்கள் அறிந்த உண்மை. அத்தோடு சட்டத்தை மீறுவதற்கும் ஊழலில் ஈடுபடுவதற்கும் இடமளித்து தமது அரசியல் நோக்கத்தை நிறைவேற்றி கொண்டுள்ளனர்.

அத்தோடு 2019-20 22 ஆம் ஆண்டில் முறையற்ற பொருளாதார கொள்கை வகுத்து நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சேர்த்துள்ளனர் என்பதை கடந்த வருடம் நீதிமன்ற தீர்ப்பு வெளிப்படுத்தியது. அத்தீர்ப்பு மக்கள் தீர்ப்பாகும் நிலையிலேயே தற்போதைய நீதிமன்ற தீர்ப்பு வெளிவந்துள்ளது. இது கோட்டாபய மற்றும் அவரின் சகாக்களின் இன்னொரு முகத்தைச் சுட்டி நிற்கின்றது.

தூக்குத்தண்டனை கைதியான துமிந்த சில்வாவிற்கு பொது மன்னிப்பு கொடுக்கும் அளவிற்கு சட்டத்தை மீறி செயல்படுவதற்கு முன்னால் ஜனாதிபதிக்கு எங்கிருந்து துணிவு வந்தது? இவ்வாறான ஒரு முடிவெடுப்பதற்கு காரணம் அவரது குடும்பமா? அல்லது அவருக்குத் துணை நின்ற அரசியல் கட்சியா? அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களா? இல்லை எனில் வேறு ஓர் அளுத்த சக்தியா என்பது கண்டறியப்படலும் வேண்டும். அந்த அளவுக்கு துமிந்த சில்வா யாருக்கு? எந்த சக்திக்கு? தேவையான ஒருவராக இருந்தார்? என்பதும் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

இத்தகைய பின்னணியில் 'கோட்டாபய ராஜபக்ச சட்டத்தை மீறி பொதுமன்னிப்பு வழங்கினார்' என உச்சமன்றம் தீர்ப்பு வழங்கும் வகையில் அரசியல் சவால்களை எதிர்கொண்டு வழக்கு தொடர்பில் நீதிமன்றில் முன் நின்ற சட்டத்தரணிகள் பாராட்டப்பட வேண்டியவர்களே. இத் தீர்ப்போடு அவர்களின் கடமை முடிந்துவிடவில்லை என்பதையும் கூறுவதோடு, சட்டத்தை மீறியமைக்கு உச்சபட்ச தண்டனையை பெற்றுக் கொடுத்தால் மட்டுமே தீர்ப்பு முழுமையடையும். இது ஏனைய ஜனாதிபதிகளுக்கும் சட்டம் தொடர்பிலும், சட்டத்தரணிகள் தொடர்பிலும் அச்சத்தை ஏற்படுத்தும். நல்லாட்சி தொடர்பில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும்.

மிருசுவில் சமூகப் படுகொலையோடு தொடர்பட்டு மரண கைதியாகி தண்டனை கைதியாக சிறையில் இருந்த ஆழ ஊடுருவும் படையணியை சேர்ந்த சுனில் ரத்னாயக்கா 2020 ஆம் ஆண்டு இதே ஜனாதிபதியால் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டார்.

இது நீதிமன்றத்தையும், சட்டத்தையும், சமூக நீதியையும் அவமதிக்கும் செயலாகும். இது இனம் சார்ந்து, இராணுவம் சார்ந்து எடுத்த முடிவாகும். இத்தகைய சமூகப் படுகொலையாளி பொதுமனிப்பின் கீழ் விடுதலை செய்தமையை இனவாத சமூகம் அங்கீகரித்து. இதன் மூலம் கோட்டாபயவின் தமிழர்களுக்கு எதிரான கோரமுகமும் சட்டத்தை அவமதிக்கும் அகோரமும் வெளிப்பட்டது.

நாடு முழுவதும் 24 இற்கும் அதிகமான சமூக புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கானோர் காணாமலாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நீதி கிட்டமைக்கும் அதிகார தரப்பும் அதிகாரமே காரணமாகும். இத்தகைய அதிகாரம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சாபக்கேடு என்பதை தற்போது மக்கள் உணர்வார்கள்.

ஜனநாயக நாட்டில் நீதித்துறை, நாடாளுமன்றம், நிறைவேற்ற துறை என்பன சயாதீனமாக இயங்க வேண்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பு. துமிந்த சில்வா தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அன்றைய நீதிமன்றத் துறையும் சுயமாக இயங்கவில்லையோ? எனக் கேள்வியைக் கேட்கத் தூண்டி உள்ளது.

அதிகாரத் துஷ்பிரயோகம் செய்து அரசியல் இலாபம் தேடும் அரசியல்வாதிகளுக்கும், ஊழல் அரசியல்வாதிகளுக்கும், நாட்டை பொருளாதார நிலையில் படுபாதாழத்திற்கு இட்டு சென்றவர்களுக்கும் மக்கள் நீதிமன்றமான தேர்தல் மூலம் தம்முடைய தீர்ப்பை வழங்க வேண்டும். தேர்தல் அதிகார துஷ்பிரயோகத்திற்கும், ஊழலுக்கும் உட் படாதிருந்தால் மட்டுமே அது நிகழும். நீதிமன்ற தீர்ப்பு மக்களை விழிப்படைய செய்யும் என எதிர்பார்ப்போம். - என்றுள்ளது. (05)

# கல்முனை சிறுவன் மர்மச் சாவு; சந்தேகநபருக்கு மீண்டும் மறியல்

நன்னடத்தை பாடசாலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்திவைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்கவைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தில் கல்முனை தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் புதன்கிழமை மீண்டும் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் மரணமடைந்த சிறுவனின் தந்தை சகோதரி ஆகியோர் நீதிமன்ற வளாகத்திற்கு வருகை தந்திருந்ததுடன் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணி ஆகியோரின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு 28 வயதுடைய குறித்த பாடசாலையின் மேற்பார்வையாளரான பிறின்ஸி புலேந்திரன் என்பவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# மீன் விலை வீழ்ச்சி

மீன் சந்தைகளில் கடந்த நாள்களில் மீன்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, பேலியகொடை மீன் சந்தையில் ஹரல்லோ மீன் 550 ரூபாவாகவும் சாலை மீன் 300 ரூபாவாகவும் பலயா மீன் 600 ரூபாவாகவும் பரவ் மீன் 800 ரூபாவாகவும் கெலவல்லா மீன் 1,000 ரூபாவாகவும் லின்னா மீன் 500 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. (05)

# யால தேசிய வனப் பூங்காவின் நுழைவாயில் மீண்டும் திறப்பு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு மூடப்பட்டிருந்த யால தேசிய பூங்காவின் பலடுபான பிரதான நுழைவாயில் பொதுமக்களுக்காக திறக்கப்பட்டுள்ளதாக ஊவா வலய வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் உபுல் இந்திரஜித் தெரிவித்துள்ளார்.

யால தேசிய பூங்காவில் உள்ள சிறு நீர்ப்பாசன குளங்களில் கசிவு ஏற்பட்டதால் நுழைவாயில்கள் நீரில் மூழ்கியதை அடுத்து அங்கு அவசர அனர்த்த நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது.

பூங்காவிற்குள் உள்ள பிரதான வீதி வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், வீதிகள் திருத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ்.பெண்ணிடம் ஆசை வார்த்தை பேசிய பெண் அழகுக்கலை நிபுணர் கைதானார்

*யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆசிரியரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி 42 லட்சம் ரூபா பணத்தினை மோசடி செய்த கொழும்பை சேர்ந்த அழகுக்கலை நிபுணரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*தன்னை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைப்பதாக ஆசைவார்த்தைகளைக்கூறி தன்னிடம் இருந்து 42 லட்சம் ரூபா பணத்தைப் பெற்று , கொழும்பைச் சேர்ந்த அழகுக்கலை நிபுணர் ஏமாற்றி விட்டார் என யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் ஆசிரியர் முறைப்பாடு செய்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*முறைப்பாட்டின்பிரகாரம்விசாரணைகளைமுன்னெடுத்த பொலிஸார் அழகுக்கலை நிபுணரை கைது செய் தனர். கைது செய்யப்பட்ட பெண்ணை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த போது, அவர் பல்வேறு நபர்களிடமும் மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.*

*அத்துடன் அவரது தனிப்பட்ட வங்கி கணக்கில் பல கோடி ரூபா பண பரிமாற்றங்களும் இடம்பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)*

# சிறுவன், சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்: பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம்

## வாதுவை பொலிஸ் நிலையத்தில் சம்பவம்

சிறுவன் ஒருவனையும் சிறுமியையும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வாதுவை பொலிஸில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பாணந்துறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாணந்துறை பதில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிரந்த சேனாரத்னவின் ஆலோசகையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சம்பத் பண்டாரவால் சந்தேக நபர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி கொஸ்கொட பிரதேசத்தில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றபோது அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 7 வயது சிறுவனையும் 13 வயது சிறுமியையும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேக நபர் கொஸ்கொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (05)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபரை கைதுசெய்ய சென்ற பொலிஸ் மீது தாக்குதல்

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் ஒருவரை கைது செய்ய சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவரை ஆயதத்தால் தாக்கியதில் தலை, வயிற்று பகுதிகளில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு காயமடைந்தவர் உரகஸ்மன்ஹந்திய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தராவார்.

காயமடைந்தவர் பலப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பில் எல்பிட்டி நீதிவான் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை தொடர்பில் 25 வயதுடை சந்தேக நபரைக் கைதுசெய்ய இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேக நபரைக் கைது செய்ய முற்பட்ட போது சந்தேக நபர் அவர்களில் ஒருவரை ஆயதத்தால் தாக்கி விட்டு தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தலதாமாளிகைக்கு சென்று வழிபாடு







இலங்கைக்கான இந்தியத் புதிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

வழிபாடுகளில் கலந்துகொண்ட உயர்ஸ்தானிகர் மல்வத்து மற்றும் அஸ்கிரிய விகாரைகளுக்குச் சென்று பீடாதிபதிகளைச் சந்தித்த உயர்ஸ்தானிகரிடம் இரு நாடுகளுக்கிடையில் கடந்த காலத்திலிருந்து நிலவும் நட்புறவு மற்றும் இலங்கையின் அபிவிருத்திக்கு இந்திய அரசாங்கத்தின் பங்களிப்பு குறித்து அவர்கள் தெரிவித்தனர்.

இங்கு இலங்கைக்கான தூதுவராக பதவியேற்கும் முன்னர் இந்திய அரசியல் தலைமைத்துவம் இந்த நாட்டு மக்களுக்கு சிறந்த சேவையை செய்யுமாறு தமக்கு அறிவித்ததாக தூதுவர் பிரமுகர்களிடம் தெரிவித்தார்.

பல நூற்றாண்டுகள் பழைமையான இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவதற்கு முன்னைய உயர்ஸ்தானிகர் பெரும் பங்களிப்பை வழங்கினார் எனவும், புதிய தூதுவரும் அவ்வாறே செய்வார் என தாம் நம்புவதாகவும் மல்வத்து விகாரையின் பீடாதிபதி வண. ஸ்ரீசித்தார்த்த சுமங்கலதேரர் தெரிவித்தார்.

சகோதர நாடான இந்தியா, இலங்கையின் வளர்ச்சிக்கு எப்போதும் உறுதுணையாக இருப்பதுடன், இந்தியாவில் இருந்து தூய பௌத்த மதம் வந்தமையால் இரு நாடுகளுக்கும் இடையில் உடைக்க முடியாத மத, கலாசாரப் பிணைப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கண்டியில் உள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகர் டாக்டர் அதிரா எஸ். உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (05)

# குறைந்த வருமானம் பெறுகின்ற மக்களை அரசு புறக்கணிக்காது

## பிரதமர் தினேஷ் உறுதி

அனைத்து வளங்களும் கொண்ட ஒரு வளமான பூமி எங்களிடம் உள்ளது. இந்த வளம் நிறைந்த பூமியில் எது பயிரிடப்பட்டாலும், அது பலனைத் தரும்.

அதற்கான திட்டமிட்ட மற்றும் இலக்குமயப்பட்ட வேலைத்திட்டத்தை 2024 இல் சாத்தியப்படுத்த முடியும். பொருளாதாரத்தை பலப்படுத்தும் தீர்மானங்களை எடுக்கும்போது குறைந்த வருமானம் பெறும் மக்களை அரசாங்கம் புறக்கணிக்காது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சீனா விஜயத்தின்போது பிரதமரின் வேண்டுகோளுக்கு இணங்க சீனத் தூதுவர் கியு ஜென் ஹொன் நூறு முட்டை அடைகாப்பகங்களை பிரதமரிடம் வழங்கியதுடன், இந்த இயந்திரங்கள் விவசாய அமைச்சின் ஹதபிம அதிகாரசபையால் நாடு முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன. அதற்கமைவாக, அதன் ஒரு கட்டமாக குறித்த இயந்திரங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு மாத்தளை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றதுடன், இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சீனாவிடமிருந்து எமக்கு கிடைக்கப் பெற்ற இந்த இயந்திரங்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் பயன் கிடைக்கும் வகையில் விநியோகிக்கப்படுகின்றன. அஸ்வெசும உதவித்தொகைத் திட்டத்துக்காகத் தெரிவுசெய்யும் நடவடிக்கைகள் பெரும்பாலும் முடிந்துவிட்டன.

மேன்முறையீடுகள் தொடர்பான முதல் கட்ட விசாரணை தற்போது நிறைவடைந்துள்ளது. அதற்கு இணையாக 2024ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட படி அதற்கான தொகையும் அதிகரிக்கப்பட்டு வருகிறது.

குறைந்த வருமானம் பெறும் மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு பொருளாதாரத்தை நிர்வகிக்க வேண்டியதன் அவசியத்தின் காரணமாக இத்தகைய முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

குறைந்த வருமானம் பெறும் மக்களின் பாதுகாப்புக்காக அரசாங்கம் என்ற வகையில் இந்த இக்கட்டான காலகட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவை எதிர்பார்க்கின்றோம். வெளிநாட்டில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்கிறோம். அந்த வகையில் கஷ்டமான நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டதால் வெளிநாடுகளில் இருந்து முட்டைகளைக் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு வளமான பூமி எங்களிடம் உள்ளது. இந்த வளம் நிறைந்த பூமியில் எது பயிரிடப்பட்டாலும் அது பலனைத் தரும். அதற்கான திட்டமிட்ட மற்றும் இலக்குமயப்பட்ட வேலைத்திட்டத்தை உங்கள் ஆதரவுடன் 2024இல் சாத்தியப்படுத்த முடியும். எமது நாட்டில் தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ள அரசாங் கத்துக்குச் சொந்தமான காணிகளை பெருந்தோட்டத் தொழிலுக்கு திறம்பட மாற்றுவதற்கான திட்டங்கள் தேவை. பயிர் செய்ய முடியுமான அனைத்து காணிகளிலும் புதிய தலைமுறையினர் கிராமங்களில் தொழில் முயற்சியாளர்களாக முன்னேறுவதற்கு இடமளிக்க வேண்டும்.

எமது கடின உழைப்பு, நம்பிக்கை மற்றும் தேவை அபிவிருத்தியில் தாக்கம் செலுத்துகிறது. உலகிலேயே சிறந்த கறுவா உற்பத்தி செய்யும் நாடு எமது நாடு. அதற்கு வெளிநாடுகளிடமிருந்து அதிக கேள்வி உள்ளது. பலரும் பல விடயங்களை சொன்ன போதிலும் நாட்டை கடந்த ஆண்டில் உணவில் தன்னிறைவு அடையச் செய்ய முடிந்தது. நாம் அனைவரும் ஒன்றாகக் கைகோர்த்து கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவோம். – என்றார். (05)

# எம்.ஜி.ஆரின் 107வது பிறந்த தின கொண்டாட்டம் யாழில் நடந்தது



தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும், நடிகருமான மறைந்த எம்.ஜி.ஆரின் 107 ஆவது பிறந்த தினம் யாழ்ப்பாணத்தில் வெகு விமர்சையாக முனெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பாசையூர் பகுதியில் புதன்கிழமை மாலை அப்பகுதி மக்களும் இந்தியாவிலிருந்து வருகை தந்த எம்.ஜி.ஆர் ரசிகர் மன்ற உறுப்பினர்களும் இணைந்து கேக் வெட்டி எம்.ஜி.ஆரினுடைய பிறந்த தினத்தை கொண்டாடினார்கள்.

இதன்போது எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டதுடன் வறுமை கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (05)




# வீடுடைத்து நகை திருடிய இளைஞன் யாழில் கைது

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுவில் - மல்வம் பகுதியில் வீடுடைத்து நகை திருடிய குற்றச்சாட்டின் பேரில் 20 வயதுடைய இளைஞர் ஒருவர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

கடந்த சில வாரங்களுக்கு முன் னர் உடுவில் - மல்வம் பகுதியில் வீடு ஒன்றை உடைத்து திருட்டுச்; சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு கிடைத்தது.

இந்நிலையில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் போதைப்பொருள் தடுப்பு பொலிஸார் மல்வம் பகுதியில் வசிக்கும் 20 வயதுடைய இளைஞர் ஒருவரை கைது செய்தனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் நல்லூர் மற்றும் மல்வம் பகுதிகளில் விற்பனை செய்யப்பட்ட 5 1½2 பவுண் திருட்டு நகைகள் கைப்பற்றப்பட்டன.

குறித்த சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக சந்தை நேற்று நகரில் கோலாகலமாக ஆரம்பம்



































யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக சந்தையின் 14ஆவது அமர்வு நேற்று யாழ். நகரின் மத்தியில் முற்றவெளியில் காலை 10:30 மணிக்கு கோலாகல மாகத் தொடங்கியது. இந்த வர்த்தகக் கண்காட்சி இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில், யாழ்ப்பாணப் பல் கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடபீடாதி பதி ந.கெங்காதரன், யாழ்ப்பாண வர்த்தக தொழில்த்துறைமன்றத்தினர், இந்தியதுணைத் தூதரக அதிகாரிகள் அனுசரணையாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

கண்காட்சியின் பதிவுகளை இதில் காணலாம்.

காலைக்கதிர்
Kalaikkathir



























150

Hayleys Solar

# நீங்கள் எங்கள் கரங்களில் பாதுகாப்பாக உள்ளீர்கள்



தீவின் நம்பகமான
சோலார் நிபுணர்களின் ஆதரவு

| வகை | Single Phase | | Three Phase | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Inverter கொள்ளளவு (kW) | 3 | 5 | 5 | 6 | 8 | 10 | 15 | 20 | 30 | 40 |
| சராசரி மாதாந்த அலகுகள் (kWh) | 342 | 570 | 570 | 752 | 940 | 1,191 | 1,755 | 2,382 | 3,511 | 4,765 |
| ஒரு மாதத்திற்கான பில் மதிப்பு (Rs) | 23,238 | 43,530 | 43,530 | 59,728 | 76,460 | 98,799 | 148,995 | 204,798 | 416,885 | 416,885 |
| திருப்பிச் செலுத்தும் காலம் (ஆண்டுகள்) | 3.8 | 2.9 | 3.4 | 2.9 | 2.7 | 2.5 | 1.9 | 1.9 | 1.9 | 1.6 |
| வரி உள்ளடங்கலாக | 1,051,380 | 1,492,700 | 1,752,300 | 2,044,350 | 2,446,730 | 2,926,990 | 3,485,130 | 4,655,100 | 6,785,000 | 7,965,000 |

நாடுமுழுவதுமான விற்பனை மற்றும் தொழினுட்ப உதவி

போதுமான அளவு இருப்பு இப்பொழுது கிடைக்கும்

மாதாந்த கட்டுப்பணம் ரூபா. 10,000 இலும் குறைவு

தொந்தரவு இல்லாத உடனடி மாற்று உத்தரவாதம்

மாத்தறை, யாழ்ப்பாணம், நாவல மற்றும் கட்டுநாயக்க ஆகிய இடங்களில் உள்ள எங்கள் அனுபவ மையங்களைப் பார்வையிடவும்

SLSEA REGISTERED SOLAR (PV) SERVICE PROVIDER-SLSEA/S0027

Hayleys Fentons Since 1919 — ENGINEERING EXCELLENCE FOR OVER 100 YEARS

SINGER

0112 102 102
www.hayleyssolar.com

---

JITF 2024 — 14th JAFFNA INTERNATIONAL TRADE FAIR

## 14வது யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சி - 2024

SOORYA ESTD 1984

## விசேட விலைக்கழிவு



~~ரூ. 2,890/-~~
**ரூ. 1,800/-**
சாம்பிராணி 25 பைகள் + சந்தன ஊதுபத்திகள்
ஊதுபத்திகள் + ஒரு டஜன் தீப்பெட்டி
சூர்யா குடை இலவசம்.



~~ரூ. 5,400/-~~
**ரூ. 4,700/-**
சாம்பிராணி 25 பைகள் + 12 சந்தன ஊதுபத்திகள்
1 மூலிகை ஈ விரட்டி திரவம் + 1 மெழுகுதிரி
சூர்யா குடை இலவசம்.





~~ரூ. 1,750/-~~
**ரூ. 1,200/-**
சந்தனம் + றோஸ் + அன்னாசி + மல்லிகை + மந்திரா + சுகந்தா
சம்பிராதய +சாண்ட் 4 வகை + சாம்பிராணி + டஜன் தீப்பெட்டி
மேலுள்ள அனைத்து பொருட்களும் ஒவ்வொன்று

மேலும் பலவற்றிற்கு எங்கள் டோம் 2 ஸ்டால் எண் 13 மற்றும் 51 ஐப் பார்வையிடுங்கள்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.01.2024இல் வெளியிடப்பெற்றது.